# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்.)

இருப்பதெல்லாம் மாயை என்று அறிந்தாலே போதும். இப்பூமியும், ஆகாயமும், ஆகாயத்திலுள்ள எண்ணிறந்த உலகங்களும் எப்பொழுதும் மாறுபட்டுக் கொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் ஓயவின்றி சண்டையும், சச்சரவுமாகவிருக்கின்றன. இதை ஒருவராலும் தடுக்கவும் முடியவில்லை.

பிரார்த்திக்க வேண்டாம்; பிரார்த்தனையினால் உங்களைச் சூழ்ந்திருக்கும் இருள் நீங்காது. முன்னையே தகைத்துக்கொண்டிருக்கும் உமது மனதை இன்னும் விரதங்களினால் வருத்த வேண்டாம். என் சகோதரர்களே! சகோதரிகளே!! தேவர்களிடத்தில் இருக்கிற பூஜைகளினாலும், பலியினாலும் ஒன்றை அடைய விரும்ப வேண்டாம். உங்களுக்கு முக்தி உங்களிடத்திலிருந்தே உண்டாக வேண்டும். ஒவ்வொருவரும் தானே தன்னைக் கட்டும் கயிற்றைத் திரிக்கிறான். உயர்ந்தவர்களுக்கும், தாழ்ந்தவர்களுக்கும் தமது விதியின் மேல் அதிகாரமுண்டு. எல்லார்க்கும் உயர்ந்த தேவர்கள் முதல் மிகத் தாழ்ந்த பிராணிகள் வரையெல்லாம் தங்கள் தங்கள் செய்கைகளினாலேயே தங்களது சுகதுக்கங்களை உண்டு பண்ணுகின்றன. இப்பொழுதிருப்பது இதற்கு முன்னிருந்ததினின்றும்; இனி வரப்போகிறது இப்பொழுதிருப்பதினின்றும் நன்மைக்கு நன்மையும்; தீமைக்குத் தீமையும் உண்டாகின்றன. சுவர்க்கத்திலிருக்கும் தேவர்கள் தாம் முன் செய்த புண்ணியங்களின் பலனை அநுபவிக்கிறார்கள். நரகத்தில் வருந்தும் பிசாசுகள் தாம் செய்த பாவத்தைத் தொலைக்கிறார்கள். ஒன்றும் சாசுவதமல்ல; நல்ல புண்ணியங்களும் கடைசியில் அழிகின்றன. கொடிய பாவங்களும் அப்படியே நீங்குகின்றன. அடிமையாக உழைத்து வந்த தனது நற்குணங்களுக்காகவும், தான் செய்த புண்ணியங்களுக்காகவும் அரசனாகப் பிறக்கலாம்; அரசனாக ஆண்டவன் செய்யத் தகாததைச் செய்ததற்காகவும்; செய்ய வேண்டியதைச் செய்யாதிருந்ததற்காகவும் கஷ்டத்தையடைந்து பூமியில் திரியலாம். உங்களுடைய அதிர்ஷ்டத்தை இந்திரனுடையதைவிட மேலானதாக உயர்த்திக் கொள்ளலாம். அதுபோல் புழுவைவிடத் தாழ்ந்ததாகவும் செய்து கொள்ளலாம். ஆனால் அது ஒன்று மாத்திரம் நிச்சயம். இப்படித் தாழ்ந்தது மேலே போவதும்; உயர்ந்தது கீழே வருவதுமாக இந்தச் சக்கரமானது வந்து கொண்டிருக்கையில் ஓரிடத்தில் தரிக்கிறதுமில்லை; சிறிது அமைதியுமில்லை. இந்த மாறுபாடான சக்கரத்தில் நீங்கள் கட்டுண்டு அதனின்று விடுபட வழியுமில்லையாயின் எல்லையற்ற வாழ்வின் அம்சம் ஒரு கொடிய சாபமே. சகல லோகங்களின் உயிர் கொடிய வேதனையே.

ஆனால் நீங்கள் கட்டுண்டிருக்கவில்லை. லோகங்களின் உயிர் இனிமையாகவே இருக்கிறது. வாழ்வின் மணம் ஆனந்தமானதாகவே யிருக்கிறது. என் சகோதரர்களின் துக்கத்திற்காக அழுது இவ்வுலகத்தின் துன்பத்தினால் மனம் விண்ட நான் இப்பொழுது சந்தோஷமாக விருக்கிறேன். ஏனெனில் இத்துன்பத்திற்கெல்லாம் விமோசன முண்டென்று எனக்குத் தெரியும். வருந்தும் மனிதர்களே! நீங்கள் வருந்துவதெல்லாம் உங்களாலேயே என அறியுங்கள். வேறொருவரும் உங்களை வாழ்ந்து இறக்கக் கட்டாயப்படுத்தவில்லை. நீங்களே இம்மாறுபாடாகிய சக்கரத்தைக் கட்டிக் கொண்டு துன்பமாகிய அதன் கைகளை முத்தமிடுகிறீர்கள். நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

எல்லாவற்றினும் மேலானதாய் ஆதிபூசமற்றதாய் எங்கும் நிறைந்ததாய் எப்பொழுதும் நன்மைப் பக்கமே செல்லுகின்றதாய் ஒரு சக்தி யிருக்கிறது. அதன் சட்டங்களே ஸ்திரமானவைகள். அதோ சிறக்கும் சிறு முல்லையின் மணமும், அத்தாமரையின் சம்பிரமமும், இந்த வஸ்திரத்தின் அழகும் அதன் வேலைகளே. பிரகாசமான மேகங்களின் சொர்ண நிறத்தையும், மயில் தோகையின் மரகதத்தையும் எழுதியது அதுதான். நக்ஷத்திரங்கள் தான் அதன் ஸ்தானங்கள். இடியும், மின்னலும், காற்றும், மழையும் அதன் அடிமைகள். அது எப்பொழுதும் வேலை செய்து செய்து அழிந்து நாசமாய்ப்போன வஸ்துக்களினின்று அழகான பொருள்களை வெளிக்குக் கொண்டு வருகிறது. அதன் போக்கை ஒருவராலும் தடுக்கவாவது, திருப்பவாவது முடியாது. அதுதான் ரக்ஷிப்பதும், கொல்வதும்; அதுதான் செய்விப்பதும், அழிப்பதும்; அதன் சட்டத்திற்கு விரோதம் செய்பவன் கஷ்டமடைகிறான். அதன் சட்டம் நிறைவேறிவர முயல்பவன் லாபமடைகிறான். ஒளித்து செய்த நன்மைக்குப் பதிலாக அமைதியையும், ஆனந்தத்தையும் கொடுக்கிறது. ஒளித்து செய்த தீமைக்கு துன்பத்தை விளைவிக்கிறது. அது எங்கும் பார்த்து எல்லாவற்றையும் குறித்துக் கொள்கிறது. நன்மையைச் செய்; உனக்கு உடனே அது நன்மை யளிக்கும். ஒரு தீங்கு செய்; உடனே அதற்கு தண்டனை நிச்சயமாய்க் கிடைக்கும். அதற்குக் கோபமென்பதும், மன்னிப்பென்பதும் கிடையாது. அதன் தராசில் ஒவ்வொரு காரியமும் மயிரிழை கூட பிசகாமல் நிறுக்கப்படுகிறது. அதற்குக் காலமென்பது கிடையாது. இன்று தீர்ப்புச் செய்தாலும் செய்யும்; வெகு காலங்கழித்துச் செய்தாலும் செய்யும். இப்படி இந்த சக்தி எல்லாவற்றையும் நன்மைக்கே கொண்டு போகிறது. அதை ஒருவராலும் தடுக்கவும், திருப்பவும் முடியாது. அதன் அம்சம் அமைதியும், அன்பும், ஆனந்தமும் முடிவு அதற்கு எல்லாரும் பணியுங்கள்.

## சீனாவில்

### அன்னியருக்கு அபாயம்.

சீனதேசத்தில் கிறிஸ்தவர்களுக்கு விரோதமான சங்கங்கள் எங்கும் அமைக்கப்பட்டு அன்னியருக்கு எதிரான பிரசாரம் பலமாக நடத்தப்படுகிறது. பிரிட்டிஷாருக்கு விரோதமான பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இதில் தலையிட முயன்ற ஒரு அன்னியதேச மிஷனரி கன்றுகக் தாக்கப்பட்டார். கின்ச்சிக்காரர்களால்வச்சாங் ஹனியாங், ஹாங்கோ முதலிய விடங்களில் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாகவும் பிரிட்டிஷாருக்கு விரோதமாகவும் மூன்று பெரிய கூட்டங்கள் நடத்தப்பட்டன. கவர்ன்மெண்டு, ராணுவப்படை இவற்றின் பல பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் பேசினார்கள். அன்னியதேச ஸ்திரீகளும் குழந்தைகளும் வுசியாங்கை விட்டுப் போகுமாறு கூறப்பட்டிருக்கிறது. எல்லா அன்னிய தேசத்தவர்களும் யாங்ஸேவைக்காலி செய்யத்தயாராக விருக்கிறார்கள். ஹாங்கோனையும் அவர்கள் காலிசெய்ய வேண்டியிருக்கும்.

## ஸத்திய தரிசனம்.

### மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

3-ம் பாகம். அத்தியாயம் 3.

மகாத்மாகாந்தி "யங்இந்தியா" பத்திரிகையில் எழுதுவதாவது:—

கப்பல்கள் துறைமுகத்திற்குள் கொண்டுவரப்பட்டன. பிரயாணிகள் கரைக்குச் செல்ல வாரம்பித்தனர். வெள்ளையர்கள் என்னிடம் அதிக ஆத்திரம் கொண்டிருந்ததாலும், என் உயிருக்கே அபாயம் நேரும் போலிருந்ததாலும், நானும் என் குடும்பத்தினரும் இருட்டிய பின்தான் இறங்க வேண்டுமென்றும், அப்போது துறைமுகசூபரிண்டெண்டெண்டுமிஸ்டாடம் எங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்லுவாரென்றும், மிஸ்டர் எஸ்காம்பு கப்பல் தலைவருக்குச் செய்தி யனுப்பியிருந்தார். கப்பல் தலைவர் என்னிடம் அதைச் சொல்லியவுடன் நான் அவ்வாறே செய்யச் சம்மதித்தேன். ஆனால் அரை மணி நேரத்திற்கெல்லாம் மிஸ்டர் லாட்டன் கப்பல் தலைவரிடம் வந்து என்னைத் தம்முடன் அழைத்துச் செல்ல விரும்புவதாயும், மிஸ்டர் எஸ்காம்பு சொல்லியனுப்பியபடி நடக்கவேண்டிய அவசியமில்லையென்றும் கூறினார். பின்னர் என்னிடம் வந்து பின்வருமாறு கூறினார்:— "உங்களுக்குப் பயமில்லாவிட்டால் நான் கூறுகிறபடி செய்யுங்கள். உங்களுடைய மனைவியும் குழந்தைகளும் ஸ்ரீமான் ரஸ்டம் ஜியின் வீட்டிற்கு வண்டியில் போகட்டும். நாமிருவரும் பின்னால் நடந்துசெல்லுவோம். திருட்டைப்போல் இரவில் தாங்கள் நகரத்திற்குள் நுழைவது எனக்குப் பிடிக்கவில்லை. உங்களை யாரும் தொந்தரவு செய்வார்களென்று எனக்குத் தோன்றவில்லை. இப்போது எல்லாம் அமைதியாக விருக்கிறது. வெள்ளையர்களெல்லாம் பிரிந்து போய்விட்டனர். எப்படியாயினும் நீங்கள் திருட்டுத்தனமாக நகரத்தில் வரக்கூடாதென்பதே என் விருப்பம்" என்று கூறியதற்கு நான் உடனே சம்மதித்து விட்டேன். என் மனைவியும் குழந்தைகளும் ஜாக்கிரதையாக ஸ்ரீமான் ரஸ்டம்ஜியின் வீட்டிற்கு வண்டியில் சென்றனர். ஸ்ரீமான் ரஸ்டம்ஜியின் வீடு துறைமுகத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலிருந்தது. நான் கப்பல் தலைவரின் அனுமதிபெற்று மிஸ்டர் லாட்டனுடன் கரைக்கு சென்றேன்.

நாங்கள் கீழே இறங்கியவுடனேயே சில சிறுவர்கள் என்னைத் தெரிந்து கொண்டு "காந்தி, காந்தி" என்று கத்தினார்கள். 5, 6 பேர்கள் அங்கு வந்து கத்துவதில் சேர்ந்துகொண்டனர். கூட்டம் அதிகரித்துவிடுமென்று மிஸ்டர் லாட்டன் பயந்து ஒரு ரிக்ஷாவைக் கூப்பிட்டார். இது தான் என்னுடைய முதலாவது அனுபவம். ஆனால் அந்த சிறுவர்கள் என்னை ரிக்ஷாவில் ஏறவிடவில்லை. ரிக்ஷாக்காரனை அவர்கள் அதிகமாக பயமுறுத்தவே அவன் ஓடிவிட்டான். நாங்கள் போகப்போக கூட்டம் அதிகரித்துக் கொண்டேவந்து, சிறிது நேரத்தில் நாங்கள் மேலே செல்ல முடியாமல் செய்துவிட்டது. அவர்கள் முதலில் மிஸ்டர் லாட்டனைப் பிடித்து என்னிடமிருந்து பிரித்து விட்டனர். பிறகு அவர்கள் என்மீது கற்களையும் அழுகிப் போன முட்டைகளையும் எறிந்தனர். ஒருவன் என் தலைப்பாகையைப் பிடுங்கிக்கொண்டான். மற்றவர்கள் என்னை அடித்து உதைக்க ஆரம்பித்தனர். நான் மயக்கமடைந்து ஒரு வீட்டுவாயிலில் இருந்த கிராதியைப்பிடித்துக் கொண்டேன். மூச்சுவிடக்கூட முடியாமல் தவித்தேன். ஆனால் அவர்கள் என்னை அடித்துக் குத்திக்கொண்டேயிருந்தனர். போலீஸ்சூபரிண்டெண்டெண்டின் மனைவி எனக்குத் தெரியும். அவள் அவ்வழியே சென்று கொண்டிருந்தாள். என்னைப்பார்த்தவுடன் அந்த ஸ்திரீ தைரியமாக முன்வந்து, வெயிலில்லாதபோதிலும் குடையைத் திறந்துகொண்டு எனக்குக் கூட்டத்தி-

-னும் மத்தியில் நின்று கொண்டாள். மிஸஸ் அலெக்ஸாண்டரை ஹிம்ஸிக்காமல் என்னைத் தாக்க முடியாதாகையால் இது கூட்டத்தின் கோபத்தைச் சற்று அடக்கிற்று.

இதற்குள்ளாக இந்த சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு இந்திய வாலிபர் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடிச்சென்று தெரிவித்துவிட்டார். போலீஸ்சூபரிண்டெண்டெண்டு மிஸ்டர் அலெக்சாண்டர் என்னை வீட்டிற்கு ஜாக்கிரதையாக அழைத்துச் செல்லுமாறு ஒரு படையை அனுப்பினார். அவர்கள் நல்ல சமயத்திற்கு வந்து சேர்ந்தனர். போலீஸ்ஸ்டேஷன்பாதையில் தானிருந்தது. அங்கு சென்றவுடன் சூபரிண்டெண்டெண்டு என்னை ஸ்டேஷனில்தங்கும்படி கூறினார். நான் வந்தனத்துடன் அதை மறுத்துவிட்டு பின்வருமாறு கூறினேன்:— "அவர்கள் தங்கள் தவறை உணர்ந்தவுடன் சமாதானமடைந்து விடுவார்கள். அவர்களுடைய நியாயபுத்தியில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது." போலீஸ் பந்தோபஸ்துடன் நான் ஸ்ரீமான் ரஸ்டம்ஜியின் வீடுபோய்ச்சேர்ந்தேன். உடம்பு முழுவதும் எனக்குக் காயமேற்பட்டிருந்தது. ஆனால் ஒரு இடத்தைத் தவிர அதிகமாகச் சதை பிய்த்துக் கொண்டு போகப்படவில்லை. கப்பலின் வைத்தியரான டாக்டர் தாதிபார்ஜா ஸ்தலத்திலிருந்ததால் எனக்குச் சாத்தியமான பூரா உதவியும் செய்தார்.

வீட்டிற்குள் எல்லாம் அமைதியாகவிருந்தது. ஆனால் வெளியில் வெள்ளையர்கள் வீட்டைச் சூழ்ந்துகொண்டுவிட்டனர் இருட்டி விட்டது. ஆயினும் வெள்ளையர்கூட்டம், "காந்தியை எங்களிடம் விடுங்கள்" என்று கத்திக்கொண்டேயிருந்தது. நல்ல புத்திசாலியானபோலீஸ் சூப்ரிண்டெண்டெண்டு கூட்டத்தைத் சமாதானப்படுத்தி அடக்கமுயன்றுகொண்டிருந்தார். ஆனால் அவருக்குக் கவலையே இல்லையென்று சொல்லுவதற்கில்லை. "நீங்கள் உங்களுடைய நண்பரின் வீட்டையும் சொத்தையும் உங்களுடைய குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டுமானால் நான் கூறுகிறபடி மாறுவேடமணிந்து வீட்டைவிட்டுப் போய்விடவேண்டும்" என்று அவர் எனக்குச் செய்தி அனுப்பினார்.

ஆகவே ஒரேநாளில் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத இரண்டுவித நிலைமைகளை நான் சமாளிக்க நேர்ந்தது. உயிருக்கு அபாயம் வருமோ வென்பது வெறும் யோசனையாக இருந்தபோது மிஸ்டர் லாட்டன் என்னைத் துணிந்து புறப்படுமாறு கூறினார். நான் அதை ஏற்றுக்கொண்டேன். பின்னர் அபாயம் வாஸ்தவத்திலேயே தோன்றிவிட்டபோது இன்னொரு நண்பர் இன்னொரு விதமான யோசனை கூறினார். நான் அதையும் ஏற்றுக்கொண்டேன். நான் என் உயிருக்கு அபாயம் நேர்ந்ததால்தான் இதையேற்றுக்கொண்டேனா, அல்லது என்னுடைய நண்பரின் வீட்டிற்கும் என் குடும்பத்தினருக்கும் அபாயம் நேரக்கூடாதென்று நான் இதை யேற்றுக் கொண்டேனாவென்று யார்தான் திட்டமாகக் கூறமுடியும்? முதலில் நான் தைரியமாகக் கூட்டத்தை எதிர்த்து நின்றதும் பின்னர் மாறுவேடமணிந்து கூட்டத்தினின்றும் தப்பி ஓடியதும் ஆகிய இரண்டும் சரியே என்று யார் திட்டமாகக் கூறமுடியும்? ஏற்கெனவே நடந்துவிட்ட விஷயங்கள் சரியா அல்லது தவறு என்று நிரூபிப்பது வீணாகும். அவற்றை யுணர்ந்து இனிமேல நடந்து கொள்ளவேண்டியதற்கு ஒரு படிப்பினை கற்றுக் கொண்டால் அது பிரயோஜனமானதாகும். குறிப்பிட்ட நிலைமையில் குறிப்பிட்ட மனிதன் எவ்வாறு நடந்து கொள்ளுவான் என்று நிச்சயமாகக் கூறுவது மிகவும் சிரமம். ஒரு மனிதனுடைய குணத்தை அவன் சாதாரணமாக நடந்துகொண்டவிதத்திலிருந்து வேறு தக்க ஆதாரமில்லாமல் நிதானித்துவிடுவது அவ்வளவு சரியானதல்ல.

அது எப்படியிருந்த போதிலும் நான் தப்பித்துச்செல்லச் செய்த முயற்சியில் என் காயங்கள் மறக்கப்பட்டன. சூபரிண்டெண்டெண்டின் யோசனைப்படிநான் ஒரு இந்தி போலீஸ் சேவக

[இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்பார்க்க.]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## புலனடக்கம்.

### நல்வாழ்வின் முதற்படி.

ருஷிய மகான் டால்ஸ்டாய் எழுதியது.

(முன் தொடர்ச்சி.)

இதை இன்னும் சிறிது விளக்கிக் கூறுகிறேன். பயமொன்றையே பிரதானமாகக் கொண்டவனின் நிலையிலிருந்து முதலில் பார்ப்போம். தனக்காகப் பிறரை வேலை செய்யும்படி கட்டாயப் படுத்தும் ஒருவனின் வாழ்வு எப்போதும் நிலையற்றது. அவன் சுக போக வாழ்க்கையில் வழக்கப்பட்டு ஆசைகளுக்கு அடிமையாகிவிடுகிறான். எனவே அவன் தன் வாழ்வுக்குத் தனக்காக வேலை செய்வோனை முழுதும் நம்பியிருத்தல் அவசியமாகிறது. அவனுக்காக வேலை செய்யும் தொழிலாளியோ பகையுடனும் பொறாமையுடனும் வேலைசெய்கிறான். அப்படி வேலை செய்யும் அவசியத்தினின்று விடுதலை பெற ஒரு சந்தர்ப்பம்வாராதா என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறான். எனவே மேற்சொன்ன மனிதனுக்கு எப்போதும் அபாயம் காத்திருக்கிறது. அவனுக்காக வேலை செய்யும் மனிதன் திடீரென்று போய்விட்டானாயின் அவன் தன் சுகபோக வழக்கங்களை விட்டுவிடவும் முடியாமல் அவற்றைப் பூர்த்தி செய்யவும் இயலாமல் அல்லலுறுவான். இனி, நீதிநெறியைப் பொட்டிக் கவனிப்போம். ஒரு மனிதன், தன்னுடைய சுக போகங்களுக்காக உழைக்கிறவர்கள் அச்சுகபோகத்தில் நூற்றிலொன்றும் அநுபவிக்க முடியாமலிருக்கையில், அவர்களுடைய உழைப்பைப் பயன் படுத்திக்கொள்ளுதல் எந்த நீதிக்குப் பொருந்தும்? எனவே இப்படிப் பார்த்தாலும் அவனுடைய நடத்தை தவறுகிறது. கடைசியாக, அன்பு நிலையை முன்னிட்டுப் பார்ப்போம். பிறரிடம் அன்பு செலுத்தும் ஒருவன் அவர்களைத் தன்னுடைய சுகத்துக்காக உழைக்கச் செய்வதை விடத்தானே அவர்களின் நலத்துக்காக உழைப்பான் என்று சொல்ல வேண்டுவதில்லை. எனவே, எந்த நோக்கத்துடன் பார்த்தாலும் ஒருவன் பிறரைத் தனக்காக உழைக்கும்படி செய்வது தவறான வாழ்வுமுறை யென்று தெளிவாக ஏற்படுகிறது.

• •

ஆனால் தற்காலத்தில் நமது ஜனசமூகம் பயன்; நீதி, அன்பு என்னும் இம்மூன்று வழிகளையும் முற்றும் அசட்டை செய்து வருகிறது. அவாவறுத்தல் என்பதை நாம் முதற்கடமையாகவுங் கொள்ளவில்லை; இறுதிக் கடமையாகவும் கொள்ளவில்லை. நல்வாழ்வுக்கு அது முற்றும் அநாவசியமானதென்று எனக்கருதிய நடந்து கொள்கிறோம். இது மட்டுமன்று; தற்கால வாழ்க்கைக் கொள்கையானது ஒருவனுடைய தேவைகளை மேலும் மேலும் பெருக்கிக்கொண்டு போதல் விரும்பத்தக்க நிலையென்றும் கற்பிக்கிறது. இவ்வாறு தேவைகளையும் ஆசைகளையும் பெருக்கிக்கொண்டு போதல் அபிவிருத்தி அடையாளமாம்! படித்த வகுப்பார் என்று கூறப்படுவோர், ஆண்மையீனத்துக் குறிகுறியான சுகபோக குணமாகவும் கருதுகிறார்களென்றால் வேறென்ன சொல்ல வேண்டும்? எவ்வளவுக் கெவ்வளவு தேவைகள் அதிகமாகின்றனவோ, எவ்வளவுக்கு அத்தேவைகள் 'சாவு'க்'காகின்றனவோ அவ்வளவுக்கு நாகரிக முதிர்ச்சியாம்! சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் வெளியாகியுள்ள நாவல்களும், கவிகளும் இதை மிகத் தெளிவாகக்காட்டா நிற்கின்றன. இவற்றில் வரும் கதா நாயகர்களும் கதா நாயகிகளும் எப்படிப் பட்டவர்கள்? பெரும்பாலும் சோம்பேறிகள்; துர்க்குணங்களுக்கு நிலைக் களனானவர்கள்; ஆயிரக்கணக்கான ஜனங்களின் உழைப்பினால் வரும் சுகபோகங்களில் புரள்பவர்கள்; பிறருக்கு எவ்வழியிலும்பயன் தராதவர்கள். கதாநாயகிகள் இத்தகைய மனிதரை மகிழ்விப்பவர்கள்; அவர்களை விடச் சோம்பேறிகள்; தங்கள் சுக போகங்களுக்காகப் பிறருடைய உழைப்பைப் பயன் படுத்திக்கொள்வதில் அவர்கள் ஆடவர்களுக்குப் பின் வாங்கு

## மீண்டும் ஒரு யுத்தம் உண்டாகுமா?

(முன்தொடர்ச்சி.)

ஜெர்மனியர்களுடைய நிலைமையைப் பற்றி யோசனை செய்யும் முன் மீண்டும் யுத்தம் உண்டாகுமா என்னும் கேள்விக்கு உத்தரவு சொல்லிவிட வேண்டியது அவசியமாயிருக்கிறது. சீனாவிலாவது துருக்கியிலாவது யாதேனும் காரணம் பற்றி யுத்தம் உண்டாகலாமென்று கருதப்பட்டு வந்தது. யுத்தத்திற்கு சர்வ தேசங்களும் ஆயத்தம் பண்ணிக்கொண்டு தான் வருகின்றன. ஆயினும் சென்ற யுத்தத்தில் உண்டான பொருள் நஷ்டமும் உயிர்ச்சேதமும் இன்னும் சரிப்படுத்தப்படவில்லை. ஏற்பட்ட கடன்கள் இன்னும் கொடுபடவில்லை. அழிந்துபோன கட்டடங்கள் இன்னும் கட்டி முடியவில்லை. இவ்வித நிலைமையில் சீனர்களை ராணுவ பலத்தைக் கொண்டு அடக்கி பயமுறுத்தவேண்டுமென்று சிலர் எண்ணினாரெனினும் அமெரிக்கா இது விஷயத்தில் தங்களது சம்மதத்தைக் கொடுக்கவில்லை. அதுவன்றி யுத்தத்தால் அல்ல சமாதானமான முறையிலேயே கூடியவாறு சீனர்களின் தேசியக் கிளர்ச்சிக்கும் அபிமானத்துக்கும் தக்கவாறு இணங்கி நமது பழைய உடன்படிக்கை ஷரத்துக்களை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று ஐரோப்பிய தேசங்களுக்கு யோசனை கூறியிருக்கிறது. இந்த யோசனையைப் பெரும்பாலும் எல்லாரும் ஏற்றுக் கொள்வார்களென்றே நம்பப்படுகிறது. எனவே சில இடங்களில் யுத்தம் ஏற்படக்கூடுமோ என்றேற்பட்டுள்ள பயமும் சந்தேகமும் ஒருவாறு நிவர்த்திக்கப்பட்டிருக்கிறது. கீழ் திசையின் நிலைமை இவ்விதமிருக்க மேற்றிசையில் ஜெர்மானியர்களிடத்து இதர தேசங்கள் மதிப்பும் அனுதாபமும் கொண்டு விளங்குகையில் பிரான்ஸ் தேசத்தவர் அவர்களை இன்னமும் அவமதிப்பாகவேநினைத்தும் எழுதியும் வருகின்றனர். இதைப்பற்றி ஜெர்மானியப் பத்திரிகைகள் கோபம் பாராட்டி எழுதினால் தேத்தண்ணீர் குடிக்கும் கோப்பைக்குள் உண்டாகும் புயலுக்கு ஒப்பாயிருக்கிறதென்று பிரான்ஸ் அதை ஏளனம் பேசி எழுதுகிறது. இத்தாலிய டிக்டேட்டரும் இதே பிரகாரமாகவே மூன் ஓர் முறை பரிகசித்துப் பேசியிருக்கிறார். இதை நினைக்கும் போது கூட்டில் அடைபட்டு நகத்தையும் பற்களையும் இழந்த ஓர் பால சிங்கத்தை வெளியில் நிற்கும் நாயும் நரியும் சேர்ந்து வசை கூறி சண்டைக்கழைப்பது போலவே இருக்கிறது. ஜெர்மானியர்கள் யதேச்சையாய் இருப்பார்களானால் அவர்கள் இதர தேசத்தவரைப்போல் ஆயுத பலத்தை விருத்தி பண்ணிக்கொள்ள சுதந்திர முடையோராயிருப்பார்களானால் ஐயோ ஜெர்மனியர்களை இவ்வளவு உல்லங்கனமாய் யார்தான் பேசத் துணிவர்? என்றாலும் இந்த நிலைமையில் இங்கிலாந்தும் அமெரிக்காவும் ஜெர்மனியிடம் பாராட்டிவரும் அன்பும் அனுதாபமும் இவ்விரு தேசத்தவரின் பெருமைக்குரிய ரகசியம் இன்னதென்பதை உலகத்தவருக்கு தெளிவாய் விளக்கிச் காட்டிக் கொண்டிருக்கிறது. ஆயுதமிழந்து சரணடைந்த எதிரியை மேலும் மேலும் துன்புறுத்தி லாபமடைய விரும்பும் மிலேச்சத்தன்மை மேல் நாடுகளில் ஒழிந்து போகவில்லை யென்பதற்குரிய திருஷ்டாந்தங்களுள் இதுவும் ஒன்றாகும். இப்படியிருக்க கீழ் ஐரோப்பிய பிரதேசங்களில் யுத்தத்திற்குப் பின் சிருஷ்டிக்கப்பட்ட லுத்தவேனியாவுக்கும் போலந்து தேசத்துக்கும் வில்னு என்னும் ஒரு சிறு மாகாண விஷயமாய் தாவா ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. போலந்து தேசத்தவர் யுத்தத்திற்கு ஆயுதமும் ஆளும் சேர்த்துவருவதாகவும் தெரிகிறது. அப்படியானால் ருஷியாவும் இதில் கலந்து கொள்ள நிர்ப்பந்தம் ஏற்படும். ருஷியா குறுக்கிடும்போது இத்தாலி அதன் எதிர்ப்புறமாகவே நிற்கும்படி ஏற்படும். இதுவே முந்திய யுத்தத்தில் இத்தாலியர் அனுஷ்டித்த கொள்கை ருஷியாவை கீழ் ஐரோப்பிய பிரதேசங்களில் செல்வாக்கற்ற நிலைமையில் வைக்க வேண்டுமென்பது தான் இக்கொள்கையின் ரகசியமாகும். ஜெர்மனியர்களோ இனிமேலும் ருஷியாவோடு விரோதம் பண்ணிக்கொள்வதை விரும்பவில்லை. ருஷியாவோடு சேர்ந்து கொள்ளாவிட்டாலும் ருஷியாவோடு சமாதானமாயிருக்கவே விரும்பி ருஷியாவோடு ஓர் உடன்படிக்கையும் ஏற்கனவே செய்துகொண்டிருக்கிறது. ஆயினும் ஐரோப்பிய யுத்த சரித்திரம் கீழ் தேச ஜனங்களுக்கு முற்றும் மாறுபட்டது. கிளைவ் சொற்ப சிப்பாய்களுடன் ஆர்க்காட் கோட்டையைப்பாதுகாத்த ஆண்மையையும் திறமையையும் கவனித்து "மோராரி ராவ்" என்னும் மஹாராஷ்டிர வீரன் 10,000 தொகைகொண்ட தன் சேனையுடன் கிளைவுக்கு உதவி செய்து எதிரியைக் கலங்கப்பண்ணி கிளைவுக்கு வெற்றிமாலை சூடுவித்தான். ஆனால் மேல் நாட்டாரோ யுத்தகாலத்தில் கஷ்டப்பட்டவருக்கு உதவி செய்யாமல் கஷ்டப்படுத்துகிறவரோடேயே சேர்ந்து கொண்டு நல்ல லாபம் அடையப் பார்க்கிறார்களென்பது பால்கன் யுத்தத்தில் ருமேனியாவும் 1914-ம் ௵ யுத்தத்தில் இத்தாலியரும் கையாண்ட முறையிலிருந்து தெரியக் கிடக்கிறது. எனவே இனி நடக்கப்போகும் எவ்வித சச்சரவிலும் சண்டையிலும் ஜெர்மனியர்கள் யாரோடு சேர்வார்கள் என்பது திட்டமாய்ச் சொல்ல முடியாது. அவர்கள் யுத்தம் செய்யக் கூடிய நிலைமையிலும் இல்லை. வாழ்ந்தவன் கெட்டால்வரு ஓட்டுக்கும் ஆகமாட்டான் என்பதுபழமொழி. என்றாலும் கால மாறுதலைப் பொறுத்து ஜெர்மானியர்கள் என்ன செய்யக் கூடும் என்பதைக் கவனிப்போம்.

D. B.

வோரல்வர். இத்தகைய ஸ்திரீ புருஷர்கள் மிக உத்தமர்களென்றும், அவர்களுடைய வரலாறு படிக்கத்தக்கதென்றும், அவர்களுடைய வாழ்வு நெறி பின்பற்றத்தக்கதென்றும் இக்காலத்து ஜனங்கள் கருதுகிறார்கள்.!

* *

இக்காலத்து மனிதர்கள் புலனடக்கமும், சுயநலத் தியாகமும் அவசியமான குணங்களல்லவென்று கருதுகிறார்களென்பதற்கு வேறு ருசு வேண்டுவதில்லை. குழந்தைகளுக்குப் புலனடக்கம், சுயநலத்தியாகம் முதலிய குணங்கள் கற்பிக்கப் படுவதேயில்லை. அதற்கு மாறாக ஆண்மையீனம், சோம்பர், சுகபோகப்பற்று ஆகிய குணங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்நிலைமையைப்பற்றி எண்ணினாலே நமக்குப் பயமுண்டாகிறது. தற்காலத்தில் பிள்ளைகளுக்குப் பெற்றோர்களும் பள்ளிக்கூடங்களும் கற்பிக்கும் கெட்ட குணங்களை ஆராய்ந்தால் அவர்கள் அக்குழந்தைகளின் கொடிய பகைவர்களோ என்னும் சந்தேகம் உண்டாகக்கூடும். மனிதனுக்கு இன்றியமையாதது உழைப்புத்திறன். இதற்கு வேண்டிய குணங்கள் ஏகாக்கிரசித்தம், விடாமுயற்சி, துன்பஞ் சகிக்கும் ஆற்றல், வேலையில் உற்சாகம் முதலியவை. இக்குணங்களை இக்காலத்துப் பிள்ளைகள் பெறுவதற்கு எவ்வித மார்க்கமுமில்லை. அதற்கு மாறாகச் சோம்பரும், உழைப்பில் வெறுப்பும் பிள்ளைகள் பெறுகிறார்கள். பணத்தை வாரியிறைத்துவேண்டிய பொருள்களை வாங்கவும், அவற்றைப் பாழ்படுத்தவும் கற்றுக் கொள்கிறார்கள். ஆனால் இவற்றுடன் நீதி, அன்பு, மனிதவர்க்கத்துக்குத் தொண்டு செய்தல் முதலியவற்றைப்பற்றி வாய் கொண்டமட்டும் பேசவும் புகழவும் கற்றுக் கொள்கிறார்கள்.

## தூத்துக்குடி

### ஸ்ரீமான் ஷண்முகவேல் நாடார் வாசகசாலை.

இவ்வாசகசாலையின் சார்பாக் பொது ஜனக் கூட்டம் ஒன்று 29—12—26 இரவு 7-மணிக்கு காரைப்பேட்டை சபா மண்டபத்தின் கண் நடைபெற்றது.

அநேக பெரியோர்களும், பெண் மக்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீஆனந்த நடராஜகான சபையாரால் கடவுள் வணக்கம் பாடப்பெற்றது. சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் எஸ். நடராஜ நாடார் பி. ஏ., பி. எல். அவர்கள் அக்கிராசனம் வகிக்க வேண்டுமென்று முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீமான் வி. வி. எஸ். எஸ். என். மாசிலாமணி நாடார் அவர்கள் பிரேரிக்க, முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீமான் தே. அ. ச. அய்யம்பெருமாள் நாடார் அவர்கள் ஆமோதிக்க, பலத்த கரகோஷத்தினிடையே அக்கிராசனம் வகித்தார்கள்.

அவ்வமயம் சென்னை பண்டிதை ஸ்ரீமதி கிருஷ்ணவேணி அம்மை அவர்களால் "அன்பு" என்னும் விஷயமாயும், வேலூர் ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஸ்ரீயான் வி. எஸ். கே. துரைச்சாமி நாடார் பி. ஏ., அவர்களால் "சமத்துவம்" என்னும் விஷயமாயும், ஸெயிண்டு அலாஷியஸ், பெண்கள் உயர்தரக் கல்லூரித் தலைமை பண்டிதர் ஸ்ரீமான் நாராயண அய்யங்காரவர்களால் "கம்பன் கவித் திறம்" என்னும் விஷயமாயும் சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றன.

விருதுநகர் ஸ்ரீமான் ரெ. தெ. பெ. சுப்பிரமணிய நாடார் அவர்கள் சுவாமி சிரத்தாநந்தர் அவர்கள் ஒரு மகமதியனால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற துக்ககரமான மரணத்திற்காக இச்சபை வருந்துகின்றதென்றும், சுவாமிஜீ அவர்கள் நம் பாரத நாட்டிற்கு செய்த அரிய பெரிய விஷயங்களைப் பற்றி வெகு சுருக்கமாகவும் பேசினார்கள். அதை ஆதரித்து ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடார் அவர்கள் சுவாமிஜீயின் மரணத்திற்காக எல்லோரும் எழுந்து நின்று அனுதாபம் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி எல்லோரும் எழுந்து நின்று அனுதாபம் காட்டினார்கள்.

அதன் பின் சபாநாயகர் அவர்கள் அறிஞர்களால் நிகழ்த்தப் பெற்ற சொற்பொழிவுகளில் பொதிந்துள்ள கருத்துக்களை நன்கு எடுத்துக்காட்டி முடிவுரையாக நமது வாசகசாலைக்கு சகலரும் அங்கத்தினர்களாகச் சேர்ந்தும், பொருள், புஸ்தகம் முதலியவைகளை தங்களால் இயன்ற அளவு கொடுத்து உதவியும், வாசகசாலைகளால் ஏற்படும் நன்மைகளை எல்லோரும் அடைய வேண்டும் என்றும் காலஞ் சென்ற ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடார் அவர்களின் குணாதிசயங்களை வெகுவாகப் புகழ்ந்தும் பேசினார்கள்.

முடிவாக சபாநாயகர் அவர்களுக்கும், உபந்நியாசகர்களுக்கும், காரியதரிசியால் வந்தனோபசாரஞ் சொல்லப் பெற்று, சபாநாயகர் அவர்களுக்கு புஷ்பகாரம் சூட்டப் பெற்று சுமார் இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது முடிவடைந்தது என்று காரியதரிசிகள் ஸ்ரீமான்களான அ. து. கலியாண சுந்தரம், ச. விவேகானந்த நாடார் எழுதுகிறார்கள்.

## ஐரோப்பாவில் கஷ்டம்.

சென்ற 70 வருஷங்களுக்குள் அடித்திராத விதமாகப் புயலும் பனி மழையும் ஆஸ்ட்ரேலிய கடலோரத்தில் அடித்துக் கொண்டிருக்கின்றன. பல செம்படவ கிராமங்கள் அடித்துக் கொண்டு போகப்பட்டன.

ஸ்பெயின் முழுவதிலும் தாங்கமுடியாத குளிராக விருக்கிறது. போக்குவரத்து நின்று விட்டது. ரயில் வண்டிகள் அதிக தாமதப்பட்டு விட்டன. தந்தி டெலிபோன் கம்பிகள் அறுந்து போயின. பல மரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பிரான்ஸின்பலவிடங்களில்பனிமழை பெய்கிறது. பல நதிகளும் ஏரிகளும் உறைந்துவிட்டன. பாரிஸில் சீதோஷ்ணம் பூஜ்யத்திற்குக் கீழாக 8 டிகிரி இருந்தது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# விடுமுறை.

நமது காரியாலயத்திற்கு, வரும் சங்கராந்திப் பண்டிகையை உத்தேசித்து வழக்கம்போல் விடுமுறையாகையால் நாளது 17—1—27-ல் வெளிவரக்கூடிய பத்திரிகை 24—1—27-ல் வெளிவரும்.

பத்திராதிபர்.

---

நாடார்குலமித்திரன்

அக்ஷய ௵ மார்கழி மீ ௨௰௬ உ

## தேசப் பொது மகாநாட்டுக் குறிப்புகள்.

அஸ்ஸாமிற் கூடிய அகில இந்தியதேசியமகாநாடு ஆரம்பத்தில் சுவாமி சிரத்தாநந்தர் மரணமும், முடிவில் உபசாரணைக் கமிட்டி மெம்பர்களில் ஒரு முக்கியஸ்தரான கோபிநாத பூக்கன் அவர்கள் மரணமும் சம்பவித்திருக்கின்றன. பின்னவரை மகாநாடுகூடின ஸ்தலத்திலேயே தகனம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விரு மரணங்களும் எல்லோரையும் திடுக்கிடச் செய்து விட்டதாயினும், மரண பயத்தினின்று யாவரையும் விடுதலை பெறச் செய்யும் அறிவிப்புமாகும்.

மகாநாட்டின் வரவேற்புத் தலைவர் ஸ்ரீமான் பூக்கனின் ஆரம்பப் பிரசங்கம் சுருக்கமாகவும், விளக்கமாகவும், மிக்கரசமாகவுமிருக்கிறது. அந்நாட்டின் பண்டைப் பெருமையையும், இயற்கை வளப்பையும் தெளிவுபடுத்தியிருக்கிறார். பாரத நாடு க்ஷேமமடைய வேண்டிச் சொன்ன பல யோசனைகளில் தலைவர் கூறியிருப்பதைப் பார்க்கிலும் ஒரு படி முந்திவிட்டார். கைராட்டினமும், கதரும் கதிமோட்சமளிக்குமென்பதை அழுத்தமாகச் சொல்லி மகாத்மா காந்தி தலைவராக வேண்டுமென்று உருக்கத்துடனும், உண்மையுடனும் அழைத்திருக்கிறார். தீண்டாமை வேண்டாமென்பதை வற்புறுத்தியிருக்கிறார். பொதுவாக அவர் பிரசங்கமெல்லாம் பொன்னை போற் போற்றத்தக்கதேயாம்.

மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் தேசியக் கோரிக்கைகளையும், ராஜீய நிலைமைகளையும், ஆட்சி முறைகளையும் வெகு விஸ்தாரமாகப் பேசியிருப்பதில் தம்முடைய சட்ட ஞானத்தையும், திறமையையும் காட்டியிருக்கிறாரேயன்றி சொற் சுவை பொருந்தியிருக்கவில்லை.

சட்டசபையில் முட்டுக் கட்டை போடுவதைப் பற்றியும், உத்தியோகங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாதென்பதைப்பற்றியும் அழுத்தமாகப் பேசியிருக்கிறார். ஆயினும் இடையில் உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்பது நிபந்தனையற்றதென்றும், எக்காலத்திற்கும் ஏற்பட்டதல்லவென்றும் நாம் நினைத்துக் கொண்டுவிடக் கூடாது என்று கொஞ்சம் பொடி வைத்துவிட்டு ஸ்தல ஸ்தாபனங்களை முக்கியமாய்க் கைப்பற்ற வேண்டுமென்றும் கூறியிருப்பதிலிருந்தும், பின்னால் உத்தியோகம் ஏற்றுக்கொள்வதற்கு ஒரு வியாக்கியானம் சொல்லுவரோ வென்று அனுமானிக்க இடமுண்டாகிறது. ஸ்ரீமான் ஐயங்கார் வெகுகாலம் ஆசார சீர்திருத்தக்காரராக விருந்து வந்திருப்பதினாலும், தீண்டாமை தேச முற்போக்குக்கு மிகவுந் தடை யென்பதை உண்மையோடுணர்ந்திருப்பதினாலும், தீண்டாமையைப் பற்றி வெகு உருக்கத்துடன் பேசியிருக்கிறார். தீண்டாமை மனிதரால் ஏற்பட்டது; தெய்வத்தின் கற்பனையல்லவென்பதை நன்குணர்த்தியிருக்கிறார். அவரின் வெகுகால மனப்பான்மையிலிருந்தும், தீண்டாமையில் அவருக்குப் பூரண வெறுப்பிருக்கிறதென்பது தெரிகிறது. ஆயினும் கதர் ஸ்தாபனத்தை காங்கிரஸிலிருந்து விலக்கி மகாத்மா காந்தியிடம் ஒப்புவித்து விட்டதுபோல் தீண்டாமையையும், மதாச்சார சீர்திருத்தக்காரர்களடங்கிய தனி ஸ்தாபனமாகச் செய்து விடலாமென்று சொல்லியிருப்பது பொருத்தமாயில்லை. மேலும், இதன் பூரணசைசலாவது, தீண்டப்படாதார்களில் பெரும்பாலோர் பொருளாதார நிலைமையபிவிருத்தியடைவதைப் பொறுத்திருக்கிறதென்கிறார். தீண்டப்படாதவர்கள் பணக்காரராகி விட்டால் தீண்டிக் கொள்ளலாமென்று கருதுகிறாரா?

தீண்டாமை இருந்து வருவதானது சுயராஜ்யத்தை அடைவதற்கு ஒரு பெரிய இடையூறாகவிருக்கிறதென்றும், அதை நிவர்த்தி செய்து விட்டால் சுயராஜ்யம் சித்திக்குமென்றும் மகாத்மா காந்தி வெகு அழுத்தமாகச் சொல்லிவருகிறார். ஸ்ரீமான் ஐயங்கார் அதற்கு ஆதாரமில்லையென்று மாறுபட்டு விட்டார். அதாவது தீண்டாமை ஒழியும்வரையில் சுயராஜ்யத்திற்காக நாம் பொறுத்திருக்கமுடியாது என்கிறார். இது கொஞ்சம் திமிரான பேச்சென்றுதெரிகிறதுடன், மகாத்மாவுக்கும், ஐயங்காருக்குமுள்ள வித்தியாசத்தை விளக்குகிறது.

அமெரிக்காவில் அடிமை வியாபாரம் ஒழியுமுன் தேசம் விடுதலையடைந்து விடவில்லையா வென்று கேட்கிறார். தேசமே தெய்வமென்னும் அமெரிக்காவுக்கும், ஜாதி மதமே தெய்வமென்னும் இந்தியாவுக்கும் வித்தியாசமில்லையா வென்று கேட்கிறோம். ஒரு வருஷம்வரையும் கிராம நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றி வைப்போமென்று வீரம் பேசுகிறவருக்கு தீண்டாமை தீர்த்தலைத் தவிர கிராமத்தில் வேறே முக்கியமான வேலை யென்னதானிருக்கிறதோ விளங்கவில்லை. இவ்வேலைத் திட்டங்களை எப்படி நிறைவேற்றுகிறார் என்று பின்னால் பார்ப்போம். எழு கோடி ஜனங்களுடைய கஷ்டங்களும், அவமானங்களும் நீங்குகிறவரையும் சுயராஜ்யமானது கண்ணுக் கெட்டாத் தூரத்தில்த்தான் தோனும்; பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்தாலும் சினிமாப் படக்காக்ஷிபோல்த்தான் காணும் என்பதை ஸ்ரீமான் ஐயங்கார் அறிந்துகொள்ள வேண்டும். சுயராஜ்யமானது லண்டன், முதல் மந்திரி வீட்டிலிருந்து தானாக ஓடி வந்துவிடாது. இந்தியாவில் நம்மிலனேகரை நாம் தீண்டப்படாதவர்களெனக் கருதுவது போல் தென்னாப்பிரிக்காவில் இந்தியரனைவரையும் தீண்டப்படாதவர்களாகக் கருதுகிறார்களென்று மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காத் தீர்மானத்தைப் பற்றிப் பேசும்பொழுது இடித்துரைத்த வார்த்தைகளை ஸ்ரீமான் ஐயங்கார் நன்குணர வேண்டும். தென்னாப்பிரிக்கா முழுதும் வெள்ளையர் அக்கிராகாரமாகப் பாவித்து இந்தியரைத்தீண்டப்படாதவராகக்கருதும் கொடுமையைத் தீர்க்க வேண்டிக் காங்கிரஸில் தீர்மானம் செய்ததைப் பார்க்கிலும், இந்தியாவில் நாயும், பன்றியும், கழுதையுங் கூடத் தாராளமாகச் செல்லும் கல்பாத்தி போன்ற பற்பல பிராமண அக்கிராகாரங்களில் சில இந்தியர் போகப்படாதென்று தடை செய்யும் கொடுமையைத் தீர்க்க ஏகோபித்துக் காங்கிரஸில் ஒரு தீர்மானஞ் செய்திருந்தால் தென்னாப்பிரிக்கா வெள்ளையர்கள் இந்தியர்களுக்கு நல்ல புத்தி வந்துவிட்டதென்றுணர்ந்து அவர்களும் நல்லவர்களாகிவிடுவார்களென்பது நம்முடைய அபிப்பிராயம். தீண்டாமையொழியாதவரை எத்தனை தேர்தல்களில் வெற்றி பெற்றாலும் சுயராஜ்யத்திற்கு யோக்கியதையடையமாட்டார்களென்பதை சுயராஜ்யக் கட்சியார் நன்குணர்ந்து கிராம நிர்மாணத் திட்டங்களில் முதன்மையாக இதை வைத்து வேலை செய்வார்களாக.

வகுப்பு வாதத்தைப் பற்றிப் பேசுமிடத்தில், சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் லார்டு வில்லிங்டன் தயவால் 6 வருஷகாலம் அட்டகாசம் செய்துகொண்டு, பிராமண பிராமணரல்லாத உணர்ச்சியை வளர்த்து வந்த ஒரு வகுப்புக் கட்சியை கன்னத்திலறைந்து உட்காரவைத்துவிட்டார்களென்று ஸ்ரீமான் ஐயங்கார் குறிப்பிட்ட பேச்சுக்கு ஏச்சுகாதர் கூறும் வண்ணம் அவ்வகுப்புக் கட்சியார் மற்றொரு கன்னத்தைத் திருப்பிக் காட்டாமல் ஐயங்காருக்குச் சரியான பதிலறை மதுரை மகாநாட்டிற் கொடுத்துவிட்டார்கள். மதுரை மகாநாட்டைப் பார்த்திருந்தால் ஐயங்கார் இவ்வாறு பேசியிருக்கமாட்டார். ஒரு குறிப்பிட்ட வகுப்புத் தலைவராயிருக்க வேண்டும்; அல்லது ஒரு வகுப்புக்குப் பிரதிநிதித்வம் வேண்டும் என்று ஆசைப்படாமல் தேசமே நம்மது; தேசம் பூராவுக்கும் தலைவராயிருக்க வேண்டும் என்ற உணர்ச்சிதான் தேவை என்று கூறிய ஆலோசனை நல்லதுதான். இந்த யோசனையை வர்ணாச்சிரம தர்மிகளாவது முழுமனதுடன் மதித்து நடப்பார்களா? வைதீகமும், வர்ணாச்சிரமமும் ஒழியாதவரை வகுப்பு வாதம் ஒழியுமென்பது பகற்கனவேயாம்.

இவ்வருடத்தில் பழுத்த தேசாபிமானிகளாகிய லாலா லஜபதிராய், கெல்கார், ஜெயகர், ராஜகோபாலாச்சாரி முதலியவர்கள் காங்கிரஸுக்கு விஜயஞ் செய்யாவிடினும், முந்தின வருஷங்களைப் போல் ஜனக் கூட்டங்களும், சந்தோஷமும் இல்லாவிடினும், மகாத்மா காந்தி விஜயஞ் செய்திருந்தமையால் சகலர் மனமும் சாந்தியடையும் வண்ணம் சிறிது திருப்திகரமாய் நிறைவேறி விட்டது. அம்மட்டும் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் பாக்கியசாலிதான். காங்கிரஸில் நுழைந்து நின்று அவர் தலை சாயாமல் பொது மகாசபையில் சிறிது வெற்றியளவில் வீடுவந்து சேர்ந்ததுபற்றிசென்னை மாகாணம் ஒருவன்னதப் பெருமை கொள்ளலாம் ஆனால் பெருமைக்கேற்ப இனி ஒரு வருஷம் சரியாய் வேலை செய்வேனென்று மகாசபையில் முடிவு கூறிய வண்ணம் அவர் நடக்கிறாரா வென்று பார்க்க வேண்டும்.

இவ்வருட மகாநாட்டில் சுயராஜ்யக் கட்சியார், கதரணிவதைக் கட்டாயப்படுத்தக் கூடாதென்று பிடிவாதமாக முன்னர் விலக்கப்பட்ட ஒரு விஷயத்தில் விட்டுக் கொடுத்து, காங்கிரஸ்காரர் எந்தச் சமயத்திலும் கட்டாயம் கதர் அணிய வேண்டுமென்று தீர்மானித்திருப்பது ஒரு விசேஷமாகும். இத்தீர்மானம் மகாத்மா காந்தியைத் திருப்திப்படுத்த நினைத்துச் செய்யப்பட்டதாயிருந்தாலும், தேசத்திற்கு நல்ல பலனைக் கொடுக்கக் கூடியதென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. மகாத்மா காந்திக்குக் கதர்ப் பைத்தியம் நீங்காதென்றும், அவர் காங்கிரஸுக்குள்ளிருந்தால்த் தான் காங்கிரஸ் பிரகாசிக்குமென்றும், கதரால்த்தான் கதிமோட்சமுண்டாகுமென்பதுவும், சுயராஜ்யக் கட்சியார் இவ்வொரு வருஷத்தில்த் தான் சிறிது உணர்ந்து கதர் விஷயத்தில் நேராக வந்திருக்கிறார்கள். இன்னும் மகாத்மா காந்தியின் எல்லாத் திட்டங்களையும் சரிவர உணர்ந்து முன்னையப் போல் மகாத்மா காந்திக்கே சர்வாதிகாரமும் கொடுத்து விடுவார்களாகில் தேசம் தற்போதிருக்கிற நிலைமையில் எல்லாக் கட்சிகளுமே காங்கிரஸ் மயமாகிவிடக் கூடும்.

இவ்வாண்டில் நடைபெற்ற மிதவாத மகாநாடொன்றைத் தவிர மற்றெல்லா மகாநாடுகளும் கதர், மதுவிலக்கு, தீண்டாமை முதலிய தீர்மானங்களைப் பெரும்பாலும் ஆதரித்திருப்பதாகவே தெரியவருகிறது. ஸ்ரீமான் விஜயராகவாச்சாரியார் கானடா தேசத்திற்குப் போய் இந்தியாவில் தென்னை மரங்களையெல்லாம் வெட்டி வீழ்த்தினாலன்றி குடியை நிறுத்தமாட்டோமென்று கூறியிருந்தாலும், தமிழ் மாகாண மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் கே. வி. ரங்கசாமிஐயங்கார், ராஜகோபாலாச்சாரியார் உத்தியோகத்துக்கு வந்தாலும் குடியை நிறுத்த முடியாதென்று கூறியிருந்தாலும், கலால் இலாக்கா மந்திரியாயிருந்த பாத்ரோவும் அவர் சகபாடிகளும் கூடியிருந்த மதுரை மகாநாட்டில் மதுவிலக்குத் தீர்மானம் தைரியமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கிலும் கால மாறுதல் எங்கும் கண்டிருக்கமுடியாது. எல்லா மகாநாடுகளின் காற்றுகளும் பெரும்பாலும் மகாத்மா காந்தி பக்கமே வீசி வருகின்றன; ராயல் கமிஷனும் வரப்போகிறது; காங்கிரஸ்க்காரர் சிலர் கெட்டவர்களாயிருந்தாலும், காங்கிரஸை நட்டாற்றில் விட்டு விடக் கூடாதென்ற கருணை மகாத்மா காந்திக்கும், யாருமவி

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஸ்காலர்ஷிப் பண்டு.

### பாங்கும், சங்கமும்.

ஏழைமாணவர்கள் ஸ்காலர்ஷிப் பண்டை எவ்வகையில் விருத்திசெய்து அதன் வருமானத்திலிருந்து ஸ்காலர்ஷிப்கொடுக்கவேண்டுமென்பதைப்பற்றி நம் மகாஜனங்களுக்குள் கிளர்ச்சியும் பலவேறு அபிப்பிராயங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இது விஷயத்தைபற்றி 6—12—26-ல் கூடிய நம் சங்கம் கவுன்சில் மீட்டிங்கில் யோசனைக்கெடுத்துக் கொண்டதில் பெருந்தொகைகளை கவுன்சிலில் ஓர் முடிவு செய்கிறதற்கு ரூல் இடங்கொடாததாலும் பொதுஜனங்களின் அபிப்பிராயங்களை தெரியும் பொருட்டும் ஜெனரல் மீட்டிங்கில் தான் முடிவு செய்வது உசிதமென்று விசேஷித்த ஜெனரல் மீட்டிங் மதுரையிலேயே தைமாதத்தில் கூட்டப்படவேண்டியதென்று தீர்மானித்திருக்கிறது.

இந்த ரூபாய் விஷயமாய், பாங்கிலிருந்து சங்கத்திற்கு, ரூபாய் பூராவையும பங்குகளாகவும வட்டிக்காகவும் பாங்கில் போடுங்கள்; அதின்வருமானத்தைக்கொண்டு சங்கம் குறிப்பிடும் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் நாங்களே அனுப்பிக்கொண்டுவருகிறோம் என்றுமட்டிலும கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

மேற்கண்ட பிரகாரம் பாங்கில் தான் போட்டுவைப்பது உசிதமென்பது ஒரு சார்பாரின் அபிப்பிராயம். நம்மகாஜனங்களுக்குள் பொதுப்பண்டு ரூபாய்களைக்கட்டடம் முதலான சொத்துக்கள் மூலமாய்த்தான் விருத்தி பண்ணிவருவது தொன்று தொட்டு பரம்பரையாய் நடந்துவருவது மேலான முறையென்பது மற்றொரு சார்பாரின் அபிப்பிராயம். இது சிற்சில வேறு சிலர் கைத்தொழில் மூலமாயாவது, ஏதேனும் கம்பெனிகள் வைத்து நடத்துவதாலாவது வட்டி சட்டக்கூடிய சிற்சில வேறுவகைகளின் வழியிலாது காப்பாற்றிவரலாமா என்பர்.

இவ்விதமிருக்க பாங்கில் போடுவதைப்பற்றி சில ஆக்ஷேபங்களுக்கிடமிருப்பதாய்த் தெரிகிறது. பாங்கின் வரலாற்றுப் பத்திரிகையில் ஆதாயத்தில் பத்தில் ஒரு பாகத்தை கல்விக்காக செலவு செய்யவதென வரையப்பட்டிருக்கிறது. அதன்படி இதுவரையும் எந்த மாணவர்களுக்காவது ஸ்காலர்ஷிப்கொடுத்து வந்திருக்கிறார்களா? சங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் பண்டுபணத்தைபாங்கில் போடவேணுமென்று எழுதியிருந்தார்களே தவிர பாங்கின் ரூல்பிரகாரம் ஆதாயத்தில் ஓர்பாகம் கல்விக்காக பாங்கில் இருக்கிறது; சங்கப்பண்டு ரூபாயையும் பாங்கில் போட்டு அந்த வருமானத்தையும் சேர்த்து இருவகை ஆதாயத்தையும் கொண்டு எராளமான மாணவர்களுக்கு தாராளமாய் ஸ்காலர்ஷிப் சங்கத்தின் மூலமாகவே கொடுத்து வருவோமென்றாவது எழுதியிருக்கிறார்களா? சமீபத்தில் கூடிய பாங்கின் டைரக்டர்களின் மீட்டிங்கில் பாங்கிலிருந்து கல்விக்காக செலவு செய்யவேண்டிய ஒரு பாகத்தைப்பற்றி சிறிதேனும் கவனித்தார்களா? நம் தாய் சங்கத்திலிருந்து ஸ்காலர்ஷிப் கொடுத்து வந்த மாணவர்களுக்கு பின்னால் சங்கத்தில் பணமில்லாதிருந்தபோது கொடுக்காததிலிருந்து ஏழைமாணவர்கள் பணத்தால்கஷ்டப்படும் பரிதாபநிலைமையறிந்தேனும் உதவிசெய்தார்களா? ஸ்காலர்ஷிப் கொடுப்பது பாங்கிலிருந்து அனுப்பவேணுமென்கிறார்களே, அப்படியானால் சங்கத்திற்கு பணவரவு செலவு செய்ய சாத்தியமில்லையென்றெண்ணுகிறார்களா?

13—12—26-ல் வெளியான நாடார் குல மித்திரனில் ஸ்ரீமான் பி. விசுவாசம்நாடார் அவர்கள் ஷை ரூபாயை பாங்கில் போட்டால்தான் பாங்கிலிருந்து கல்விக்காகக் கொடுக்கவேண்டியதைப்பற்றி கேட்க உரிமையுண்டென்கிறார். போடாவிட்டால் கேட்கக்கூட உரிமையில்லையென நண்பர் நினைக்கிறார்போலும் நண்பர் விசுவாசம்நாடார் அவர்கள் பாங்கின் வரலாற்று பத்திரிகையையும் மெமோரண்டம் ஆப் அசோசியேஷன் விதிகளையும் பார்த்திருந்தால் இவ்விதம் எழுதியிருக்க மாட்டார்.

இவ்வித நிலைமையில் மூதாதைகளின் வழக்கப்பிரகாரம்கட்டடம் முதலான சொத்துக்கள் மதுரையிலேயே வாங்கி ஏழைமாணவர்கள் ஸ்காலர்ஷிப் பணத்தை விருத்திசெய்வதே மேலானமுறையென்பதான எனதபிப்பிராயத்தை வெளியிடுகிறேன். என்றாலும் பாங்கிலிருந்து கல்விக்காகச் செலவு செய்யவேண்டிய பத்தில் ஒரு பாகத்தை சங்கத்திற்கு கல்விக்காகவே நாளதுவரை உள்ளதை கொடுத்து இனியும் கொடுத்துவருவார்களானால் பாங்கில் போட்டுவைப்பதுதான் சிறந்த முறையென்று அபிப்பிராயப்படுகிறேன்.

எல்லாம்வல்ல இறைவன் ஏழைமாணவர்கள் பால் கிருபைகூர்ந்து ஷை ரூபாயை நல்ல நிலைமையில் வைத்துவிருத்தி செய்துவரும்படி அனுக்கிரகம் செய்வாரென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

மா. உ. சு. குருசாமி,
கடையநல்லூர்.

II

ஏழைமாணவர்களின் சகாயநிதிப் பண்டை அபிவிர்த்தி செய்யும்விஷயமாய் இருக்கிற அபிப்பிராயபேதத்தை சரியானமுடிவு செய்ததாகத் தெரியவில்லை பொன்விளையும் நிலமாக இருப்பதைப்பார்க்கிலும் பொன்னாகவிருப்பது பிரயோசனமில்லை யென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியானால் பொன்விளையும் பூமியாகவே இருப்பதுதான் மிகச் சிறந்ததாகும். ஷை நிதி பாதுகாப்புக்கும் ஏழைமாணவர்களின் செலவு வகையறுக்களுக்கும் தகுந்தலாபகரமான சொத்தை வாங்கி வைத்து மேல் நடத்தி அதன் வருவாயைக் கொண்டே செலவிடுவது தான் ரெம்பவும் மேலானதும் தவிர நீடித்தகாலமாய் என்றும் அழியாத பொருளாகவுமிருக்கு மென்பது கவனிக்கத்தக்கது.

ஞா. வெள்ளையநாடார்,
தோப்புக்குளம்.

---

ருந்துவருகிறது. ஆகையால் பண்டித நேரு கூட்டத்தார் மகாத்மா காந்தியின்றி மகிமையில்லை யென்றுணர்ந்த பின்னும், மகாத்மா காந்திக்கு சர்வாதிகாரமும் கொடுத்துவிட்டு தாங்கள் அவர் சொன்னபடி செய்ய இனியும் பின் வாங்கக்கூடாது. ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்காரும் பேசியபடி நடப்பவரானால் மகாத்மா காந்தியின் வேலைத் திட்டத்தை அவர் சொல்கிறபடி நிறைவேற்றிவைக்க வேண்டும். அப்படி அவர் செய்வாரா வென்று பார்ப்போம்.

## குறிப்பு.

### அதிபர் சுற்றுப்பிரயாணம்.

நமதுமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் சு. ஆ. முத்துநாடார் அவர்கள் நங்குலமித்திரனின் க்ஷேமாபிவிருத்தியைக்கருதி 6—1—27 முதல் ஒரு மாதகாலம்வரை வடஜில்லாக்களாகிய திருச்சிறுப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், கோயமுத்தூர், செங்கல்பட்டு, சென்னை ஆகிய விடங்களின் பலபாகங்களுக்கும் சுற்றுப்பிரயாணம் செய்யத் தமது சகாக்களுடன் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள். மித்திரனின் இது காலத்திய நிலைமையையும், இனி பலரின் ஆதரவின்மேல் விருத்திசெய்யப் பெறவேண்டியதின் கவலையையும் அபிமானிகளனைவரும் அறிவர். நாடார் ஜன சமூகாபிவிருத்தியில் நாட்டங்கொண்ட மித்திரனின் வாட்டத்தை ஓட்டி அவனின் தேட்டத்தைக் கேட்டு தக்கது செய்ய நாமொவ்வொருவரும் கடப்பாடுடையோமென்பதை ஈண்டு வலியுறுத்த வேண்டுவதின்று. ஆகையால் ஆங்காங்குறையும் அன்புமிக்குடைய நண்பர்களும் அபிமானிகளும் மற்றுமுள்ள பொதுநலப் பிரியர்களும் நமதுஅதிபரவர்களை ஆதரித்து வேண்டுமுதவி யாண்டும் புரிந்துமென்மேலும் உற்சாகமும் ஊக்கமுமூட்டுவார்களென்று நம்புகிறோம்.

---

## பொதுஜன ஊழியத்தில்

### அன்பின் அத்தியாவசியம்.

### பிரசாரப் பேருழியர்கள் கவனிக்கவேண்டும்.

(திருமேனிநாதன்)

நம் நாடார்மகாஜன சங்கத்தின் நன்னோக்கங்களைப் பரவச்செய்வதிலும், மற்றும் ஆங்காங்கு நம் இனத்தவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொது ஸ்தாபனங்களின் ஹேதுக்களை எடுத்துரைப்பதிலும் பொறுப்பேற்று பிரசாரத்திலிறங்குபவர்கள் தங்கள் கடமையை முதலில் நன்றாய் அறிந்திருக்கவேண்டுமென்பதே இவ்வியாசத்தின் கருத்தாகும். பொதுஜன சேவையை, அன்புமயமான ஒரு அரிய வேலை என நாம் நன்றாய் உணர்ந்திராவிடில் அதிலிறங்கிச் சிறிது காலம் வேலைசெய்வதற்குள், சலிப்பும், மனச்சோர்வும், ஏற்பட்டுசிலசந்தர்ப்பங்களில் சுயமரியாதையற்றதாகவும்கூட காணப்படும். நாம் ஒருகாரியத்தைநிலைநாட்ட ஏற்றவழிகளையும் வசதிகளையும் செய்து கொண்டு முற்றுப்பெறச்செய்யுந் தருவாயிலுங்கூட நம்மில் ஒருவரால் அந்தக் காரியம் அப்படியே நாசமடையக்கூடும். நாம் ஒரு காரியத்திற்கு அதிக அபிமானத்துடன் அஸ்திவாரம்போட்டால் சிலர் அதற்கு அழிவு தேடலாம். நாம் ஒன்றை பொதுஜனக் கிளர்ச்சிக்காகப் பிரசாரம் செய்து கொண்டிருந்தால் நம்மில் சிலர் அதற்கு எதிர்ப் பிரசாரமும்செய்யக்கூடும்.

இச்சந்தர்ப்பங்களில் மனக்கிலேசமும சோர்வும், அபிமான மேலீட்டால் ஆத்திரமும் சாதாரணமாக நம்மையறியாமல் வெளிக்கிளம்புவது சகஜம். பொதுஜன ஊழியத்திற்கென லக்ஷக்கணக்கான ஜனங்கள் மத்தியில் பிரசாரஞ்செய்யப் புறப்பட்ட ஒரு பிரசாரகர் முதலில் தன் தேக சௌகரியம் குடும்பக்கவலை முதலியவற்றை தியாகம்செய்துவிட்டு, பிரயாணக் கஷ்டம் முதலியவைகளைச் சகித்துக்கொண்டு அபிமானத்துடன் பிரசாரம் செய்வதே போன்று நம் பிரசாரத்தினிடையேயும் ஏற்படும் பாதிப்பான காரியங்களைக்கண்டு நாம் வெறுப்புக் கொள்ளாமல் சகித்து கொள்ளவேண்டும்.

இது ஒரு சாதாரண மனிதருக்கு உண்டாகுமானாலும், அதனால் தீய பலன் ஏற்பட்டு காரியக் கெடுதியடைந்து விடாது. எத்தனை கஷ்டங்களும், இடையூறுகளும் வந்தாலும், தங்கள் வாக்கிலும், செய்கையிலும் கலக்கமில்லாமல் அன்புமயமாகவேயிருக்க வேண்டும். அன்பினாலல்லவா நாம் பொதுக் காரியங்களில் தலையிடுகிறோம். ஒரு காரியத்தை செய்யும் போதோ, அல்லது ஒருவருக்கு ஒரு விஷயத்தை மனதில் தெளிவுபடுத்தும போதோ அது அவர்கள் மனதில் பட்டு தெளிவுபடும் வரையில் அன்புடனும், ஆக்கத்துடனுமிருந்து செய்யாவிட்டால் அது எப்படி பிரயோஜனம் அடையமுடியும்? அப்படியில்லாமல் அவர்கள் உணராமலிருப்பதை உணரும்படி செய்ய அதிகப்பிரயாசை எடுக்காமல் அவர்கள் மேல் அவசரப்பட்டு அலக்ஷியஞ்செய்து வீண் துவேசத்தையோ அல்லது வெறுப்பையோ உண்டாக்கிக் கொள்ளுவோமானால் நாமே நாம்நினைத்தகாரியத்தை அடையமுடியாமல் செய்து கொண்டவர்களாவோம். மகாஜனசங்கம்முதலியபொறுப்புவாய்ந்த பொது ஸ்தாபனங்களிலிருந்து பிரதிநிதியாகச் செல்லும் போது இத்தகைய தவறுதல்களுக்கு இடங்கொடுப்பார்களானால் அது அந்த ஸ்தாபனங்களையே போய்ப் பாதிக்கும். பொறுப்புவாய்ந்த அபிமானிகளுக்கு ஒவ்வொரு வார்த்தையிலும் செயலிலும் அன்பும் அடக்கமும் வேண்டும். அவர்களுடைய அன்பும் அடக்கமும் அபிமானமுமே அவர்களுடையகாரியங்களுக்கு ஒத்தாசை செய்யக்கூடியதாக விருக்க வேண்டும். எதையும் மேல் வாரியாக அதன் தோற்றத்தைக்கண்டு விருப்பாவது வெறுப்பாவது கொள்ளக் கூடாது. அபிமானத்துடன் அதை ஊடுருவி, அன்புமயமாக நின்று ஆராய்ந்து ஒழுகவேண்டும். உதாரணமாக ஒரு பகுதியிலுள்ள ஜனங்கள் யாதாமொருவகையில் குறைவுபட்டிருந்தால்அதைக்கண்டு அலக்ஷியம்செய்து அன்பில்லாமல் வெறுப்புற்று கேவலமாக நினைப்போமானால் நமக்குள் அன்பான பேச்சும் செயலும் ஏற்படாது. அப்போது நாம்கொண்ட காரியமும் சித்தியடையாது.

நம் மகாஜனசங்கப் பிரசாரத்தை ஏற்றுச்செல்லும் குலாபிமானிகளில் சிலர் ஆங்காங்கு செல்லும்போது சிற்சில விடங்களில் நம்மவர்கள், பொருளாதார நிலைமையால் பாதிக்கப்பெற்று வறுமைவாய்ப்பட்டு அநாகரீகமாய்த் தோன்றுவதைக்கண்டு அவர்கள் நிலைமைக்கு வருந்தி அவர்கள் பால் இரக்கங்கொண்டு அவர்கள் அந்நிலைமையுற்ற காரணகாரியங்களைக் கண்டுணர்ந்து அதை நிவர்த்திப்பதற்கு சீர்திருத்த வழிகளைக்காட்டி அவர்களை முன்னேற்றுவதில் கவனம் கொள்ளவேண்டும். ஏழைகளாயிருக்கிறார்கள் என்று அலக்ஷியம் செய்யவாவது நாகரீகமில்லை என்று இழிவாகக் கருதவாவதுகூடாது. அவர்கள் பணக்காரர்களாயும் நாகரீகமுள்ளவர்களாயும் கல்விமான்களாயுமிருந்தால் நம குலாபிமானப் பிரசாரம் அவர்களுக்குத் தேவையேயில்லை.

இப்படிப்பட்ட இடங்களில் நாம் குலாபிமானத்துடன் பொதுஜன சேவையிலிறங்குவதுடன் அவர்களுக்குள்ள குறைகளில் ஆழ்ந்த அனுதாபமும் அவைகளை நிவர்த்திப்பதில் அதிகஆசையும்கொண்டு அவர்களிடத்தில்நெருங்கிப்பழகிப்பேசுவதில்அன்பாகவும் அடக்கமாகவும் நடந்து காட்டுவோமானால் விசேஷ பலனுண்டாகும். நாமே அவர்களுக்கு உதாரணமாய் விளங்கவேண்டும். அவர்களை கண்ணியமான முறையில் நடத்துவதிலிருந்து அவர்கள் மனம் நம்மிடமும் நமது சங்கத்தினிடமும் திரும்பி ஆழ்ந்த பக்தியும் உண்டாகவேண்டும் நம்மில் ஏற்றத்தாழ்ச்சிகளை பல வழிகளிலும் ஒருவருக்கு ஒருவர் திருத்தி பொதுவான முன்னேற்றதில் நம் சமூகம் க்ஷேமமடைவதற்குத்தான் மகாஜனசங்கம் ஏற்பட்டிருக்கிறது. நம் ஜனசமூகம் பல விடங்களில் பிரிந்து வசித்துவருவதில் எல்லாவகையிலும் தேர்ச்சிபெற்று விளங்குவது எந்தப் பிரதேசத்திலாவது ஜில்லாவிலாவது கிடையாதுஎன்பதுண்மை. ஒவ்வொரு இடத்திலும் ஒரு வகையில் தேர்ச்சியும் மற்றொரு விஷயத்தில் பிற்போக்குமுற்றிருக்கும். ஆங்காங்குள்ள குறைகளை நிவர்த்திப்பதற்காகவே பிரசாரங்கள் நடைபெறுகின்றன.

நமது தாய்ச்சங்கம் நிலவியிருக்கும் வட்டகையில்கூட சிற்சில விடங்களில் அபிவிருத்தி அடைந்திருந்த போதிலும் எத்தனையோவகையில் குறைவுபட்டிருக்கிறது.

ஆகவே யாதாமொரு வட்டகையிலுள்ள நம் மகாஜனங்கள் ஆசார அனுட்டானங்களிலோ, பொதுஜனக் காரியத்திலோ குறைவுபட்டிருந்தால் அதைப்பற்றி குறைவாகக்கருதாமல் அவர்கள் பால் அன்புசெலுத்த வேண்டுகிறேன். அன்பும் அபிமானமுமில்லாத பிரசாரம் விசேஷ பலனைத்தராதென்பதை நாம் ஈண்டு குறிப்பிடத் தேவையில்லை. அன்பும் அபிமானமும் இருக்குமானால் எவ்வித பாதிப்புக்கும் இடம் தராது.

அன்பின் வழியது உயிர்நிலை—அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

எனும் திருக்குறளாரின் பொன்போன்ற வாக்கியத்தை ஈண்டு இது சமயம் கையாள்வது பொருத்த முடைத்தாகும்.

---

## வருடக்கொண்டாட்டம்.

தூத்துக்குடி ஸ்ரீமான் ஷண்முகவேல்நாடார் அவர்கள் ஞாபகார்த்த வாசகசாலையின் 1-வது ஆண்டு நிறைவு விழா பாளையங்கோட்டை ஸ்ரீமான் டானியல்தாமஸ்நாடார் பி. ஏ, எம். எல். வி. அவர்கள் தலைமையின் கீழ் 16—1—27-ல் அதிசிறப்பாய் நடைபெறுவதாகும். அனைவரும் விஜயஞ்செய்யக் கேட்டுக்கொள்கிறோம்.

காரியதரிசிகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பார்ப்பன ரல்லாதார் 10-வது மாகாண மகாநாடு.

### உபசாரணைத் தலைவரவர்கள் பிரசங்கத்தின் சாரம்.

சீமாட்டிகளே! கனவான்களே!!

வரவேற்புக் கழகத்தின் சார்பாக இந்தப் பண்டைக்கால சரித்திரப் பெருமையுள்ள நகரத்திற்குப் பார்ப்பனரல்லாதார் 10-வது மாகாண மகாநாடு கூடும் சமயத்தில் நான் உங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

நாட்டின் தொண்டிற்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவுசெய்த தேசத் தொண்டர்களாகிய திருவள் டாக்டர், டி. எம். நாயர் பெருமான், திருவள். சர். பி. தியாகராயசெட்டியார் அவர்கள் ஆகிய இருவர்களால் இப்பெரிய பார்ப்பனரல்லாதார் இயக்கமானது பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டது.

இந்த இயக்கமானது தேசிய இயக்கமாகவும் ஜனநாயக இயக்கமாகவுமிருக்கிறது. பற்பல ஜாதியார்களையும் வகுப்பார்களையும் தங்கள் தங்கள் நீண்டகால அறியாமையிலுறக்கத்திலுமிருந்து எழுப்பி, அரசியல் முறைகளையும் ஒழுக்க வழிகளையும் ஞாபகப்படுத்தி, அதனால் ஜன சமூக வாழ்க்கையில் அவரவர்களுக்கு உரிமையாயுள்ள நிலைகளைப்பெற்று தேசிய முன்னேற்றத்திற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் உதவி புரியச்செய்வதற்காகவே இந்த இயக்கமானது தொடங்கப்பெற்றது. இது எவ்விதமான குறுகிய அரசியற்கொள்கையையாவது அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பாருடைய பகைமையையாவது ஆதி காரணமாகக் கொண்டதல்ல. தென்னிந்தியாவிலுள்ள எல்லா வகுப்பாருடைய கல்வி, சமூக வாழ்க்கை, சிக்கனம், கைத்தொழில், விவசாயம், அரசியல் முறை முதலியவற்றின் வளர்ச்சிகளின் முன்னேற்றத்திற்காகத் தொடங்கியுள்ளது.

கடைசியாக அனைவருக்கும் சமத்துவம் வேண்டுமென்பதே நமது இயக்கத்தின் அடிப்படையான கருத்து என்று நான் சொல்லுவேன். சிறந்த இவ்வகையான பெரிய இயக்கங்கள் எப்பொழுதும் சுயநலம் கருதிய ஏதாவது சில இயக்கத்தோடு முரண்படுவது சரித்திர அனுபவம் என்று நான்சொல்லுவேன். இவ்வியக்கத்தின் தொடக்கத்தில் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தமானது நடவடிக்கைக்கு வந்தது. அந்த விரிவான தேர்தலை நாம் பின்பற்றிச் சீர்திருத்த சட்டசபைக்கு நாம் பெருந் தொகையினராக அனுப்பப் பெற்றோம்.

மற்ற மாகாணங்கள் சீர்திருத்தத்தைக் கையாள மறுத்து முட்டுக்கட்டையைத் தங்களுடைய கொள்கைத் திட்டமாகக் கொண்டிருக்கையில் நாம் சென்னையில் சட்ட வரம்புக்குட்பட்ட வழிகளினால்தான் மேம்பாடடையலாமென்று நம்பி, அரசியல் முறையை நடத்தும்பொறுப்பை ஏற்றுக்கொண்டோம்.

பார்ப்பனரல்லாதாருக்குத் தக்கசமயம்வாய்த்தால் எத்தகையபொறுப்பான நிலைமையிலும் ஏற்றபடி நடந்துகொள்ளத் திறமையுண்டு என்பது பிறருக்கு இந்தச் சீர்திருத்தத்தை நாம் நடத்திக் காட்டியதால் செவ்வனே விளக்கியிருக்கிறோம். இரட்டையாட்சியின் குறுகிய வரம்புக்குள்ளாக, இந்த இயக்கத்தின் சில நோக்கங்களை நாம் அடையப் பெற்றோம்.

தேர்தல் காலத்தில் பார்ப்பனர் செலுத்திய பாணம் நமது கொள்கைகளையும் நோக்கங்களையும் முழுதும் மாறுபாடாக வாக்காளர்களிடத்தில் சொன்னதேயாகும். அவர்கள் நாம் உத்தியோகங்களை விரும்பியதாயும், வகுப்பு இயக்கத்தைப் பார்ப்பாரைப் பகைக்கும் கொள்கைத் திட்டமாக நாம் கொண்டதாகவும், நம்முடைய நன்மையின் பொருட்டு சில வகைகளில் அரசாங்கத்தார் போக்குப்போல நடந்து அவர்களை யாதரிப்பவர்களென்று சொல்லியும் நம்மை எப்பொழுதும் இகழ்ந்துரைக்கிறார்கள். இவ்வாறு சட்டசபைத்தேர்தல் காலத்தில் தங்கள் முழுபலத்தையும் நம்மை இகழ்வதில் செலுத்தி வாக்காளர்களிடம் சொன்னார்கள்.

வகுப்பியக்கம் அழிந்தது என்பதைப்பற்றி ஆராயுமுன்பதாக நம்மை இழிவு படுத்தும் பொருட்டு நமக்குத் துரோகமாக வெளிப்படுத்திய சில தப்பு எண்ணங்களை நீக்க வேண்டுமென்று நினைக்கிறேன். நம்முடைய இயக்கமானது ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு எதிரிடையானதென்று சொல்லப்படுகிறது.

நம்மீது கொண்டுவரப்பட்ட இந்த ஆதாரமற்ற குற்றத்தை மறுதலிக்க வேண்டும். நமது இயக்கமானது நெடுங்காலமாகத் தத்தம் சமத்துவ உரிமைகளை இழந்துபோன அநேக வகுப்பார்களின் முன்னேற்றத்திற்காகவே இருக்கிறது என்று சொல்லுவோம். நாம் முன்னமே சொன்னபடி இத்தகைய இயக்கங்கள் எல்லாம் தன்னலங் கருதுவோரோடு முரண்படவேண்டியது வரும். இவ்வாறே, பல நாடுகளிலும் பல காலங்களிலும் இவ்வித முரண்பாடுகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஐரோப்பாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பொது மக்களுக்கும் குருக்களுக்கும் சண்டை ஏற்பட்டது. 18-வது நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் குடிகளுக்கும் அதிகார வர்க்கத்தாருக்கும் ஏற்பட்டது. ருஷ்யாவில் குடிகளுக்கும் தன்னல ஆட்சிக்கும் ஏற்பட்டது. தற்காலத்தில் ஐரோப்பாவில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நமது மாகாணத்தில் நமது இயக்கத்திற்கும் ஏற்பட்டு இருக்கிறது.

பிராமணீயமானது மற்றொரு வகுப்பைத் துன்புறுத்தித் தன் வகுப்பை முன்னுக்குக்கொள்ள நிற்கும் வரையில் இந்தப் போராட்டம் ஒழியாது. நாமெல்லா வகுப்பாருக்கும் சமத்துவ உரிமை வேண்டுமென்று ஆரம்பமுதல் பறை சாற்றிக்கொண்டிருக்கிறோமென்று மறுமுறையும் நான் சொல்லுவேன். இதை யடைவதற்கு நாம் பாடு படவேண்டியது கொஞ்சமல்ல. எந்தச் சாதியாராவது வகுப்பினராவது தாங்கள் வெகுகாலமாக அனுபவித்து வந்த உரிமைகளை இழக்க மிகப் பாடுபடாமலிணங்க மாட்டார்கள்.

சீமாட்டிகளே! கனவான்களே! கடந்த தேர்தலில், நமது இயக்கம் பெரிய வெற்றி பெறுவிட்டாலும் நமது கொள்கைத் திட்டமானது சற்றும் அசையாமலும் அழியாமலுமிருக்கிறது. இந்தக் குறைவு நமது இயக்கத்தால் நமது நாட்டில் போதுமான கட்டுப்பாடான வழியில் கிளர்ச்சி செய்யாததாலும் வாக்காளர்களை முற்றும் கவனியாது விட்டதாலும் உண்டானது.

ஆகையால் இந்த மகாநாட்டின் முதல் வேலை நம் நாடு முழுவதும் நமது இயக்கத்தைத் திருத்தி அமைத்துக் கிளைச் சங்கங்களையும் நிலைநாட்டி பத்திரிகைகளினாலும் பிரசங்கங்களினாலும் வாக்காளர்களுக்கு உண்மையை அறிவுறுத்த வேண்டியதேயாகும். அடுத்த தேர்தல் காலத்திலாவது மற்ற எல்லா இயக்கத்தாரும். நம்மை ஒன்று சேர்ந்து எதிர்த்தபோதிலுங்கூட அவர்களைவிட அதிகத்தொகையினராக நம்மவர்கள் சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெறுமாறு நம்மை அமைத்துப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சுய ஆளுகைக்கு மாற்றிய இலாக்காக்களில் நம்முடைய நோக்கங்களைப் பரிபூரணமாக நிறைவேற்றுவதுடன் சுய ஆளுகைக்கு மாற்றப்படாத இலாக்காக்களுடனும் போராடலாம்.

கனவான்களே! சென்ற பத்து ஆண்டுகளாக நாம் அரசியல் முறையிலேயே அதிக காலத்தைக்கழித்ததால், அதனிலும் அதிக முக்கியமான மற்ற முயற்சிகள் கவனிக்கப்படவில்லை. இனி நம் வேலை சமூக வாழ்க்கையிலும் சிக்கனத்துறையிலுமிருக்கிறது. தீண்டாமை, மதுவிலக்கு சிறிய தொழில் வளர்ச்சிகள் முதலிய திட்டங்கள் நமது முழு கவனத்தையும் கவர வேண்டும்.

நமது இந்து சமூகத்திலுள்ள எல்லாத் தீங்குகளிலும் மிக்கக்கொடியது தீண்டாமையேயாகும். அதை நீக்கினாலொழிய, நம் சமூகத்தில் பற்பல வகுப்பாருக்குள்ளும் சகோதர உணர்ச்சி உண்டாவதற்கு யாதொரு வழியுமில்லை. ஆகையால் நாமிந்தவழியில் பெரு முயற்சிசெய்யவேண்டும். பற்பல வகுப்புப்பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களிலும் விளையாட்டுக் கூட்டங்களிலும் ஒன்றாய்ச் சேர்த்துச் சிறு வயதிலேயே சகோதர உணர்ச்சியை உண்டுபண்ணுவது, தீண்டாமையை ஒழிக்கும் வழிகளிலொன்றாகும். தீண்டப்படாதவர்கள் என்று சொல்லப்படுவாருடைய மக்களை ஏற்றுக்கொள்ளாத பள்ளிக்கூடங்களுக்கும் கலாசாலைகளுக்கும் அரசாங்கத்தார் உதவிப் பணங்கொடுத்து அங்கீகாரம் செய்யாமல் மறுத்து இவ்வழியில் உதவி செய்யவேண்டும்.

சத்திரங்களையும் கோயில்களையும் மற்றப் பொது நிலயங்களையும் நடத்துகிற அதிகாரிகள் வகுப்புப் பிரிவினையைக் கருதி எவரையும் சேர்க்க மறுக்கக்கூடாது.

உலகமுழுதும் தொழிலாளர்கள் பெரும்பான்மையும் கள் குடி முதலிய மயக்கக் குடிகளை உட்கொள்ளும் கெட்ட பழக்கத்தில் ஈடுபட்டவர்களாயிருக்கிறார்கள் என்பது உலகமறிந்த உண்மை. நம் நாட்டிலும் அது இருக்கிறது. தொழிலாளர்கள் தங்கள் வருவாயிற் பெரும் பகுதியை இவ்வகையில் விரயமாக்கிச் சுகத்தையுங் கெடுத்துத்தாமுந் தங்கள் குடும்பத்தாரும் நல்வாழ்க்கை யடையாமற்போகிறார்கள். தேச சமூகத்தின் ஒழுக்கத்தையும், சுகத்தையும், பொருளையும் அழித்துக் கொண்டிருக்கிற இக்கேடுகளை யொழிக்கும் வகை வழிகளைக்கண்டுபிடிப்பது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

இந்தியா பெரும்பான்மையும் பயிர்த்தொழில் நாடாகவிருக்கிறது. பயிர் விளைவானது பெரிதும் காலமழையைப் பொறுத்திருக்கிறது. பயிர்த்தொழிலாளர்களுக்குப் போதுமான ஒழிவு நேரமிருக்கிறது. பருவமழையில்லாதபோதும் அவர்களுக்கு யாதொரு வேலையுமில்லை. இவர்கள் கொட்டை நூற்றல் போன்ற சிறிய கைத்தொழில்களையாவது கைக்கொண்டால் சிறு ஊதியமாவது கிடைக்கும். சிறுமிகளுக்கும் சிறுவர்களுக்கும் ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் கொட்டை நூற்றலை கட்டாயப்பாடமாக வைக்கவேண்டும். சிறுகைத்தொழிலாற் செய்யக்கூடிய கதர்போன்ற மற்ற எல்லாச் சாமான்களையும் வாங்கி ஆதரிக்க வேண்டியது நம ஒவ்வொருவருடைய கடமையாகும்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் பரவியிருக்கிற மற்றொரு பெருந்தீங்கு ஒன்றுண்டு. அதாவது, நாடார் சகோதரர்கள் கோயிலுக்குள் விடப்படாததால் வருந்துகிறதேயாகும். அவர்கள் கோயிலுள் புகுவதற்கு உதவியாகப் பொது மக்களுக்கு நல்லெண்ணம் உண்டாகும்படி கிளர்ச்சி செய்து இந்த நெடுங்காலக் குறைவை நீக்க நாம் வெகு பாடுபடவேண்டும்.

வரவேற்புக் கழகத்தின் சார்பாக, பல்வேறு அரசியல் கொள்கைத்திட்டங்களை யுடையவர்களாயிருந்தாலும், பார்ப்பனரல்லாதார் அனைவரையும் இம் மகாநாட்டிற்கு நான் அழைத்திருக்கிறேன். அவர்கள் ஆழ்ந்த கருத்துக்களை கொண்டு நமக்கும் நம் இயக்கத்திற்கும் உதவி புரிவார்களாக.

நாங்கள் அவசரமாக அழைத்ததற்கு இணங்கித் தங்கள் சௌகரியங்கள் அனைத்தையும் பொருட்படுத்தாது இங்கு 'எழுந்தருளியிருக்கின்ற சீமாட்டிகளுக்கும் கனவான்களுக்கும் இந்த வரவேற்புக் கழகத்தின் சார்பாக வந்தனோபசாரம்' கூறுவதுடன் நாங்கள் தங்களுக்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகளில் குறைபாடுகள் இருந்தால், பொறுத்தருளும்படி மறுமுறையும் வேண்டுகின்றேன்.

---

முக நக நட்பது நட்பல்ல (நெஞ்சத்
தக நக நட்பது நட்பு.

## தமாஷ் பேச்சு.

ராஜம்:—அடே ராமா அங்கு என்னடா செய்கிறாய்?

ராமன்:—நான் அழுகிறேன் அம்மா!

ராஜம்:—என்டா அழுகிறாய்?

ராமன்:—எனக்குப் பயமாக விருக்கிறது அம்மா!

ராஜம்:—என்னடா பயம்?

ராமன்:— எங்க எஜமான் இன்று எனக்குப் பேய் பிடித்து விடுகிறேன் என்று சொன்னார். அதனால் எனக்கு நினைக்கும்பொழுதெல்லாம் அழுகையாய் வருகிறது. நான் பிள்ளையும், குட்டியும் பெருத்தவன் அம்மா!

ராஜம்.— (சுந்தரத்தைப் பார்த்து) நமது வேலைக்கார ராமனுக்கு தாங்கள் பேயை பிடித்து விடுவதாகச் சொன்னீர்களாமே. பாபம்! அவன் அழுகிறான்.

சுந்தரம்:—அங்காய் ராஜம்! அப்படியல்ல. இன்று காலையில் கிளாஸ் எடுத்து பால் வாங்கிவரச் சொன்னேன். அவன் கிளாஸை உடைத்து விட்டான். அதற்காக உன் சம்பளத்தை பிடித்து விடுவேனென்றேன். அதற்குத்தான் அழுகிறான்.

பேய் என்றால் ஆங்கிலத்தில் சம்பளம் என்று பொருள்படும்.

---

மனிதன்:—எது குசும்பு சாஸ்தியாயிருக்கிறதே.

விகடன்:—ஆமாம். குசும்பா! அது விலை சாஸ்திதான்!

மனிதன்:—அட சிவா! என் கண்ணும் இப்படிப் பேசுகிறீர்.

விகடன்;— அடசிக்காலே வருகிறேன்! தங்களைத் தொடவில்லையே!

மனிதன்:—நம்மளிடத்தில் இப்படிப் பேசினால் ரெம்பக் கிடைக்கும்.

விகடன்:—அதற்காகத்தானே இப்படிப் பேசி லாபம் பெரலாம் என்று இருக்கிறேன்.

சிவ. கு. சு.

---

### உத்தமபாளையம்.

இவ்வூர் மேலத் தெருவில் சில பெரிய மனிதர்கள் முயற்சியின்பேரில் ஸ்ரீமகாபாரதத்தை அப்பககரை தொட்டியபட்டி மகா-ள-ள-ஸ்ரீ நா. துரைச்சாமி சேர்வை அவர்கள் சாதுர்யமாகவும், சாமர்த்தியமாகவும் காலக்ஷேபம் நடத்திவந்தார். செய்யுள்களுக்குத் தாத்பரியம் சொல்லும்போதெல்லாம் அதற்கிசைந்த பழமொழிகளும், கதைகளும் கேட்போரின் மனம் சந்தோஷப்படும்படி உறை சொல்லிவருகிறார். பிரசங்கத்தைக் கேட்க ஜனங்கள் அதிகமாய்க் கூடுகிறார்கள். இவ்வூர் வாசியான ஓர் முகமதியர் ஷெயாருக்கு மோதிரம் ஒன்று பரிசு அளித்திருக்கிறார். வாசிப்பு இன்னும் நடந்துவருகிறது என்று ராமையா எழுதுகிறார்.

---

### இந்தியாவில் பெரிய தலைவர்கள்.

பம்பாய் "நேஷனல் ஹெரால்ட்" பத்திரிகை இந்தியாவிலுள்ள 10 பெரியவர்களை குறிப்பிடுமாறு தன்னுடைய சந்தாதார்களைக் கேட்டுக் கொண்டதன்படி முதல் 10 தலைவர்களுக்கு கிடைத்த ஓட்டுகள் பின் வருமாறு:—

| | |
|---|---|
| மகாத்மா காந்தி | 9306 |
| டாக்டர் தாகூர் | 7391 |
| ஸர். ஜெகதீச சந்திரபோஸ் | 5954 |
| பண்டித நேரு | 4035 |
| அரவிந்த கோஷ் | 3907 |
| டாக்டர் ராய் | 3524 |
| ஸ்ரீமதி சரோஜனி | 3415 |
| பண்டித மாளவியா | 2618 |
| லாலா லஜபதிராய் | 2568 |
| கனம் சாஸ்திரி | 1516 |

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நல்ல தருமம்! நல்ல தருணம்!! நல்ல லாபம்!!!

## அருப்புக்கோட்டை

## "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி

## தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

## மொத்தம் சீட்டுகள் 33000.

சீட்டு 1-க்கு ரூ 1.

## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-வரு மே மீ 4 உ க்கு பிரபவ வரு
சித்திரை மீ 22 உ பிரைஸ் எடுக்கக் கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

| | | | |
|---|---|---|---|
| 2-வது பிரைஸ் | ரூ 1500 | 3-வது பிரைஸ் | ரூ 1000 |
| 4-வது பிரைஸ் | ரூ 500 | | |
| 200 ரூ-ல் 2-க்கு | ரூ 400 | 100 ரூ-ல் 5-க்குரூ | 500 |
| 250 ரூ-ல் 0-க்கு | ரூ 1000 | 20 ரூ-ல் 50-க்குரூ | 1000 |
| 10 ரூ-ல் 100-க்குரூ | 1000 | 5 ரூ-ல் 200-க்குரூ | 1000 |
| 8 ரூ-ல் 600-க்கு | ரூ 1800 | 2 ரூ-ல் 2400-க்குரூ | 4800 |

ஆக பிரைஸ்கள் 3381-க்கு ரூ 17500
புக் 1500-க்குக் கமிஷன் ரூ 3000
குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் வகையறுக்கள் ரூ 1800
தனிப் பிரைஸ் ரூ 1700
பண்டுக்கு ரூ 9000
ஆக ரூ 33000

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

சகல விதமான கடிதப் போக்குவரத்தும் ரூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

### விசேஷக் கமிஷன்.

நூறு ரூபாய்க்கு மொத்தமாகச் சீட்டு விற்றுக் கொடுப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் விசேஷக் கமிஷன் கொடுக்கக்கூடும்.

### தனிப் பிரைஸ் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது பிரைஸ் | ரூ 100 | 2-வது பிரைஸ் | ரூ 50 |
| 3-வது பிரைஸ் | ரூ 20 | 4-வது பிரைஸ் | ரூ 15 |
| 5-வது பிரைஸ் | ரூ 10 | | |
| 6-முதல் 10 வரை 5 வீதம் | ரூ 25 | | |
| 11-முதல் 750-வரை 2 வீதம் | ரூ 1480 | | |

ஆக ரூ 1700

தனிப் பிரைஸ், இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகள் பத்துப் பிரைஸ்களே இருப்பதால் 22 சீட்டுள்ள இரண்டு புஸ்தகம் விற்றவர்கள் தனிப் பிரைஸுக்காக ரூ 2-ம் பிடித்துக் கொண்டு ரூ 38 மட்டும் அனுப்பலாம். தனிப் பிரைஸில் சேர்த்து கொள்ள விருப்பமுடையவர்கள் தனிப் பிரைஸ் ரூ 2 பிடித்துக் கொள்ளாமல் ரூ 40-ம் அனுப்பிவைக்கவேண்டும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்கள் விசேஷக் கமிஷன் ரூ 5 ம் பிடித்துக்கொண்டு மீத ரூபாயை அனுப்பி வைக்கலாம் தனிப் பிரைஸுக்குரிய ரூபாயை அனுப்பினால் தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ளப்படும். அதற்குப் பிரியமில்லையானால் அதற்குரிய ரூ 5 யும் பிடித்துக் கொண்டனுப்பலாம்.

ரூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.

சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை


(இ-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

...னின் உடையைத்தரித்துக் கொண்டு தலையில் ஒரு தகட்டின் மீது சென்னைத் திறுசில் முண்டாசு கட்டிக் கொண்டேன். இரண்டு துப்பறிபவர்கள் என்னுடன் வந்தனர். ஒருவர் இந்திய வியாபாரியைப் போல் மாறு வேடமணிந்து முகத்திலும் வர்ணம் பூசிக்கொண்டு வந்தார். இன்னொருவருடைய வேஷம் எனக்கு மறந்துபோய் விட்டது. ஒரு சந்துவழியாகக் கூட்டத்தைத் தாண்டித் தெருக்கோடியில் எனக்காகக் காத்துக்கொண்டிருந்த ஒரு வண்டியிலபோய் ஏறிக்கொண்டேன். சிறிது நேரத்திற்கு முன் என்னைத் தங்குமாறு மிஸ்டர் அலெக்சாண்டார் கேட்டுக்கொண்ட போலீஸ் ஸ்டேஷனுக்கே இப்போது போய்ச் சேர்ந்தது. அவருக்கும் துப்பறிபவர்களுக்கும் நான் வந்தனமளித்தேன்.

நான் இவ்வாறு தப்பித்துக்கொண்டிருக்கையில் மிஸ்டர் அலெக்சாண்டர் "கிழக் காந்தியைக் கசப்பான ஆப்பிள் மரத்தில் தூக்குப் போட்டுவிடுவோம்" என்று பாடிக்கொண்டே கூட்டத்தை சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்தார். நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஜாக்கிரதையாக வந்துசேர்ந்து விட்ட தகவல் அவருக்குக் கிடைத்தவுடன், அவர் கூட்டத்தினிடம் செய்தியை மெதுவாகக் கூறினார்:—"உங்கள் ஆசாமி பக்கத்துக் கடை வழியாகத் தப்பித்துக் கொண்டுபோய் விட்டார். ஆகையால் நீங்கள் எல்லோரும் இனிமேல் வீட்டுக்குப்போக வேண்டியதுதான்" சிலர் கோபமடைந்தனர். சிலர் சிரித்தனர். சிலர் இதை நம்ப மறுத்து விட்டனர்.

"நீங்கள் நம்பாவிட்டால் இரண்டொரு பிரதிநிதிகளை நியமியுங்கள். அவர்களை நான் உள்ளே அழைத்துக் கொண்டு போய்க் காட்டுகிறேன். அவர்கள் காந்தியைக் கண்டு பிடித்தால் நான் அவரைச் சந்தோஷத்துடன் உங்களிடம் ஒப்பித்து விடுகிறேன். இவர் அங்கு இல்லாவிட்டால் நீங்கள் கலைந்து போய்விடவேண்டும். ஸ்ரீமான் ரஸ்டம்ஜியின் வீட்டை இடிக்க வேண்டுமென்றாவது ஸ்ரீமான் காந்தியின் மனைவி மக்களைத் துன்புறுத்த வேண்டுமென்றாவது உங்களுக்கு உத்தேசமில்லையென்று நிச்சயமாகக் கருதுகிறேன்" என்று சூபரிண்டென்டெண்டு கூறினார்.

கூட்டம் வீட்டைச் சோதிக்குமாறு பிரதிநிதிகளை அனுப்பியது. சீக்கிரத்தில் அவர்கள் ஏமாற்றத்துடன் வெளிவந்தனர். உடனே கூட்டம் கலையஆரம்பித்துவிட்டது. சூபரிண்டெண்டெண்டுசாமர்த்தியமாக நிலைமையைச் சமாளித்ததைக் கண்டு பெரும்பாலோர் ஆச்சரியமடைந்தனர். சிலர் ஆத்திரமடைந்தனர்.

அப்போது குடியேற்ற நாட்டு மந்திரியாக இருந்த காலஞ் சென்ற மிஸ்டர் சேம்பர்லேன், என்னைத் தாக்கியவர்கள் மீது வழக்குத் தொடரும்படி நேட்டால் கவர்ன்மெண்டுக்கு தந்தியனுப்பினார். மிஸ்டர் எஸ்கூம்பு என்னைக் கூப்பிட விட்டு, காயங்களுக்கு வருந்துவதாகத் தெரிவித்து விட்டுப் பின் வருமாறு கூறினார்:—"நான் கூறுவதை நம்புங்கள். உங்களுக்கு ஏற்பட்ட அற்பக் காரியத்திற்காகக் கூட நான் சந்தோஷப்பட முடியாது. மிஸ்டர் லாட்டனின் யோசனைப்படி நடந்து கஷ்டத்தைச் சமாளித்துக்கொள்ள உங்களுக்கு உரிமையிருந்தது. ஆயினும் நீங்கள் என் யோசனைப்படி நடந்திருந்தால் இவ்வளவு கஷ்டமும்நேர்ந்திருக்காது. உங்களைத் தாக்கியவர்களை நீங்கள் அடையாளம் காட்டினால் அவர்களைக் கைது செய்து வழக்குத் தொடரத் தயாராக விருக்கிறேன். மிஸ்டர் சேம்பர்லேனும் எனக்கு அம்மாதிரியே அறிவித்திருக்கிறார்"

நான் அதற்குப் பின்வருமாறு பதில் கூறினேன்:—"நான் ஒருவர் மீதும் வழக்கு நடத்த விரும்பவில்லை. நான் இரண்டொருவரை அடையாளம் காட்டக்கூடும். ஆனால் அவர்களைத் தண்டிப்பதால், பிரயோஜன மென்ன? மேலும் அவ்வாறு தாக்கியவர்கள் மீது நான் பழி சுமத்தத் தயாராகவில்லை. நேட்டால் வெள்ளையர்களைப்பற்றி நான் இந்தியாவில் அவமதிப்பாயும் மிகைப்படுத்தியும் பேசியதாக அவர்களுக்குக் கூறப்பட்டது. அதை அவர்கள் நம்பியிருந்ததால் ஆத்திரமடைந்ததில் ஆச்சரியமே இல்லை. தலைவர்களும் நீங்களும தான் இதற்குப் பொறுப்பு. நீங்கள் அவர்களுக்குச் சரியான வழி காட்டியிருக்கலாம். ஆனால் நீங்களும் ராய்ட்டர் செய்தியை உண்மையென்று கருதிவிட்டீர்கள். நான் ஒருவரையும் தண்டனைக் குட்படுத்தவிரும்பவில்லை. உண்மை தெரிந்தவுடன் அவர்கள் தங்கள் நடத்தைக்கு வருந்துவார்களென்பது நிச்சயம்"

"இதைத் தாங்கள் எழுதிக்கொடுத்தால் சௌகரியமாகவிருக்கும். ஏனெனில் அதை வைத்துக்கொண்டு நான் மிஸ்டர் சேம்பர்லேனுக்குத் தந்தியனுப்பவேண்டும். நீங்கள் எதையும் அவசரப்பட்டுச் செய்ய வேண்டுமென்று நான் விரும்பவில்லை. மிஸ்டர் லாட்டனையும் உங்களுடைய இதர நண்பர்களையும் கலந்து யோசித்துக்கொண்டு முடிவு தெரிவிக்கலாம். ஆனால் ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்ளுகிறேன். உங்களைத் தாக்கியவர்கள் மீது வழக்குத்தொடர உங்களுக்குள்ள உரிமையை நீங்கள் விட்டுக்கொடுத்தால் உங்களுடைய மதிப்பு அதிகரிப்பதுடன் அமைதியை நிலைநிறுத்த எனக்கும் உதவி செய்தவர்களாவீர்கள்" என்று அவர் கூறினார்.

"ரொம்ப வந்தனம். நான் ஒருவரையும் யோசனை கேட்க வேண்டியதில்லை. நான் உங்களிடம் வருவதற்கு முன்னரே இவ்விஷயத்தைப்பற்றி முடிவு செய்துவிட்டேன். என்னைத் தாக்கியவர்கள் மீது நான் வழக்குத் தொடரக்கூடாதென்பது என்னுடைய திடமான அபிப்பிராயம். ஆகையால் என்னுடைய முடிவை இப்போதே எழுதிக் கொடுத்து விடுகிறேன்" என்று நான் கூறிவிட்டு அவசியமான ஸ்டேட்மெண்டை எழுதிக்கொடுத்தேன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection